Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 53 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(02.09.2022) ஹிஜ்ரி 1444, சஃபர் - 05 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## பட்ஜெட் வாக்கெடுப்பு இன்று!

02 பக்கம்

## சீரற்ற காலநிலை தொடரும்!

02 பக்கம்

# கைகொடுத்தது ஐ.எம்.எவ்.!

## 2.9 பில்லியன் டொலர் கடனுதவி

## அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமையளிக்குமாறு அரசிடம் கோரிக்கை

•யோ.தர்மராஜ்

பொருளாதார நெருக்கடியில் உள்ள இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு அமைய, இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் விரிவாக்கப்பட்ட கடனுதவியை வழங்குவதற்கான அதிகாரிகள் மட்ட உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் நேற்று அறிவித்தது.

அதன்படி, பொருளாதார நெருக்கடியில் உள்ள இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 48 மாதங்களுக்காக இந்த உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு, கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. 02 பக்கம்

## ஐ.எம்.எவ். - இலங்கை

**அண்மைய கலந்துரையாடல்கள்**

| | |
|---|---|
| 01.09.2022 | 2.9 பில். டொலர் வழங்குவதற்கு அனுமதி |
| 30.08.2022 | பேச்சுகள் வெற்றியென ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றத்தில் அறிவிப்பு |
| 30.08.2022 | எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் சந்திப்பு |
| 30.08.2022 | முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் சந்திப்பு |
| 25.08.2022 | ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பு |
| 24.08.2022 | மத்திய வங்கி ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல் |
| 20-30.06.2022 | இலங்கையில் கலந்துரையாடல்கள் |
| 16.07.2022 | இலங்கைக்கு ஜீ20 நாடுகள் உதவ வேண்டுமென ஐ.எம்.எவ். முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா கோரிக்கை |
| 09-24.05.2022 | பிரதமர், மத்திய வங்கி ஆளுநர், திறைசேரியின் செயலாளர் உள்ளிட்டோருடன் இணையவழி கலந்துரையாடல் |
| 18-22.04.2022 | ஐ.எம்.எவ். - இலங்கை பிரதிநிதிகள் வொஷிங்டனில் கலந்துரையாடல் |

© Thamilan Graphic Desk

Infographic : Udesh Selvaraj



## கடன் நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பது முக்கியம்

### ஐ.எம்.எவ். பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கடன் நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது மற்றும் அனைத்து சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தையும் உறுதிசெய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியமானதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## ஐ.எம்.எவ். உதவியூடாக பொருளாதாரம் சீரடையும்

### பிரதமர் தினேஷ் சபையில் விசேட அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாட்டினால் இரு தரப்பு மற்றும் பல தரப்பு அபிவிருத்தி பங்காளர்களின் கடனுதவியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும். இதனூடாக, எங்களுடைய அத்தியாவசிய தேவைகளுக்கான நிதிகள் கிடைப்பதுடன், பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை சாதாரண நிலைமைக்கு கொண்டுவருவதற்கு முடியுமென பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் அறிவித்தார். 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

கடன் பெற்றதைக் கூட சந்தோசமா கொண்டாடும் நாட்டை எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கியளா...?



## நெருக்கடிக்கு காரணமான ராஜபக்ஷக்கள் மகிழ்ச்சியில்

### ஜனாதிபதி குறிப்பிட்ட நண்டுகள் அவர்களே என சஜித் பரிகாசம்



•யோ.தர்மராஜ்

முழு நாடும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும்போது, நெருக்கடிகளுக்கு காரணமான ராஜபக்ஷக்களும் மொட்டுக்கட்சியாளர்களும் சிரித்துக் கொண்டு, மகிழ்ச்சியாக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் நேற்று குற்றஞ்சாட்டினார்.

அத்தோடு, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து மத்திய வங்கி ஆளுநர் விசேட அறிக்கையொன்றை முன்வைத்துள்ளார். உண்மையில் ஆளுநர் நந்தலால் வீரசிங்க முன்வைத்துள்ள அறிக்கையிலேயே... 02 பக்கம்

## ஈ.பி.எவ். வரிசைக்கு முற்றுப்புள்ளி; 1958 என்ற துரித எண் அறிமுகம்

ஊழியர் சேமலாப நிதியத்தை பெற்றுக் கொள்ளவும் தொழில்வழங்குநர்கள் தம்மை பதிவுசெய்துகொள்வதற்கும் 1958 என்ற துரித இலக்கமும் appointment.labourdept.gov.lk என்ற இணையதளமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் இந்த இலக்கத்தினூடாக அல்லது இணையதளத்தினூடாக முன்பதிவுகளை மேற்கொண்டு, சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளதாவது, 02 பக்கம்



## சீனாவிடமிருந்து உரமும் கொடுத்த பணமும் கிடைக்கவில்லை

## 06 இலட்சம் மெ.தொன் தரமற்ற அரிசி இறக்குமதி

## நெல் விளைச்சல் 40 வீதத்தால் வீழ்ச்சி

### விவசாய அமைச்சர் அமரவீர அதிர்ச்சித் தகவல்



•யோ.தர்மராஜ்

இரசாயன உரத்தை தடைசெய்து சேதனப் பசளை திட்டத்தால் கடந்த 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட நெல் விளைச்சல், 30 மற்றும் 40 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக தகவல்கள் பதிவாகியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் அறிவித்தார்.

அத்தோடு, சீன உரக்கப்பலுக்கு செலுத்தப்பட்டுள்ள 6.9 மில்லியன் டொலரை மீளப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், அதற்கான வாய்ப்பு இல்லாதமையினால், அதற்கு பதிலாக இரசாயன உரத்தை... 02 பக்கம்

## சமூக கொடுப்பனவுகளை உரிய முறையில் வழங்குக!

### மனோ எம்.பி. சபையில் வலியுறுத்து



சமூக நலன்புரி கொடுப்பனவுகளை பெறுகின்ற பெயர் பட்டியலில், பெருந்தோட்டத் தொழிலாளர்களும், கொழும்பு நகர பாமர மக்களும் இடம்பெற வேண்டும். இதை நாம் கண்காணிப்போமென தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில்... 02 பக்கம்

## 134 பேரைக்கொண்டு ஸ்திரமான அரசாங்கம்

### ஜனாதிபதியிடம் கோரினார் நாமல் எம்.பி.



•யோ.தர்மராஜ்

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு யோசனை முன்வைத்தவர்களே இன்று சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற்கு முன்வரவில்லை. எனவே, 225 பேரையும் இணைப்பதற்கு முயற்சிப்பது, தனக்கு வாக்களித்த 134 பேரைக்கொண்டு ஸ்திரமான அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டுமென முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 02 பக்கம்

## சிகரெட் விலை அதிகரிப்பு

சிகரெட் ஒன்றின் விலையை அவற்றின் தன்மைகளுக்கேற்ப 4 வகைகளின் அடிப்படையில் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, சிகரெட் ஒன்றின் விலையை 3, 5, 10 மற்றும் 15 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெறுமதிசேர் வரி 12 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக சிகரெட் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

## உஷ்



முக்கியமான பிரச்சினைகளை தீர்த்துவிட்டு, உடனடியாக ஜனாதிபதித் தேர்தலொன்றுக்கு செல்லலாமென ஜனாதிபதி ரணிலுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல். ஆனால், நாட்டின் தற்போதைய நிலையில் அப்படியான தேர்தலொன்றுக்கு செல்வது சரியல்லவென ரணில் தெரிவித்துள்ளாராம். ஆனாலும் விரைவில் தேர்தலொன்று வரக்கூடுமென அரசியல் வட்டாரங்களில் தகவலொன்று பரவுகிறது.

## உணவுப் பாதுகாப்பின்மையால் நாட்டில் 10இல் 03 பேர் பாதிப்பு

### ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டு




இலங்கையில் பத்தில் மூன்று பேர் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியினால் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவுத் திட்டத்தின் செயலாளர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் குறைபாடுகள் உள்ளவர்களும் கடுமையாக... 02 பக்கம்

## விண்வெளியில் நெல் விதைத்து சீனா சாதனை



விண்வெளியின் சுற்றுவட்டப் பாதையில் நிரந்தர விண்வெளி நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டத்துடன் சீனா பணியாற்றி வருகிறது. இந்நிலையில், சீன விண்வெளி நிலையத்தின், ஆய்வகத்தில் விதைகளை கொண்டு... 02 பக்கம்

## கைகொடுத்தது ஐ.எம்.எவ்!...

அத்தோடு, நிதி பற்றாக்குறையை குறைப்பதற்கு பல தரப்பு கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு மேலதிக கடனை வழங்க வேண்டும். கடன் வழங்குநர்கள் இவ்வாறான மானியத்தை வழங்கவில்லையென்றால் கடனை மீள செலுத்த முடியாது நெருக்கடி மேலும் உக்கிரமடையும் - என சர்வதேச நாணய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவின் சிரேஷ்ட அதிகாரி பீட்டர் புரூவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடந்த 24ஆம் திகதி விஜயம் மேற்கொண்டிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி, மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட இலங்கை அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையையடுத்து, இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக சர்வதேச நாணய நிதியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார திட்டங்கள் மற்றும் கொள்கை மறுசீரமைப்புகளுக்கமைய இந்தக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்த உடன்படிக்கை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரின பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுத்தல், நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல், பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாப்பது மற்றும் ஊழல் அபாயங்களை நிவர்த்திசெய்வதற்கான கட்டமைப்பு சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவது மற்றும் இலங்கையின் வளர்ச்சித்திறனை வெளிக்கொணர்வது இந்த நிதித் திட்டத்தின் நோக்கங்களாகும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளின் வேலைத்திட்டம், பொருளாதாரத்தை ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதுடன், இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான வாய்ப்பும் கிடைப்பதோடு, பொருளாதார மீட்சிக்கான அடித்தளத்தை தயாரிப்பதையும் நிலையான வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின்கீழ் இலங்கையின் நிதி மூலமான வருமானத்தை அதிகரிக்கும் வகையிலான நடவடிக்கைகளை எடுப்பதோடு, வரிக் கொள்கையில் மறுசீரமைப்பை மேற்கொள்வது குறித்தும் இலங்கைக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

2024ஆம் வருடமாகும்போது இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியை 2.3 சதவீதமாக அதிகரிப்பதற்கான இலக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர் கடன் வழங்குவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று மத்திய வங்கி வளாகத்தில் ஊடக சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தது.

இந்த ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த சர்வதேச நாணய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவின் சிரேஷ்ட அதிகாரி பீட்டர் புரூவர்,

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடைzயில் பொருளாதார கொள்கைகள் தொடர்பாக அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதற்கமைய 48 மாதங்கள்வரை கிடைக்கும் வகையில் 2.9 பில்லியன் டொலர் விரிவாக்கப்பட்ட கடன் வழங்க இணக்கப்பாடு எட்டப்பட்டது. இந்த இணக்கப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைக்க வேண்டும். அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பான நம்பிக்கையும் முக்கியமாகும். இரு தரப்பு மற்றும் தனியார் கடன் வழங்குநர்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

கடுமையான கொள்கைகளுக்கு அமையவே மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்தல், எரிபொருள் மற்றும் மின்சாரம் தொடர்பாக செலவாகும் நிதியை பெற்றுக் கொண்டு, அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள அவதானத்தைக் குறைத்தல், மத்திய வங்கியின் நம்பிக்கைத்தன்மை உறுதிப்படுத்தல், அந்நிய செலாவணியை அதிகரித்து, நிதி ஸ்திரத்தன்மையை மீண்டும் கட்டியெழுப்புதல், அரசியல் ஸ்திரத்தன்மை, நெருக்கடிகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறைப்பதற்கு பலமிக்க சமூக பாதுகாப்பை ஏற்படுத்தல் மற்றும் ஊழலை குறைப்பதன் ஊடாக பேரின பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்தலும் அதில் உள்ளடங்கும்.

இதேவேளை, இலங்கையின் கடன்'சுமை அசாதாரண நிலையில் இருப்பதால், கடன் நிலைத்தன்மையை ஏற்படுத்துவதற்கு கடன் வழங்குநர்களின் கடன் மானியங்கள் அவசியமாகும். கடன் வழங்குநர்களின் மானியம் அல்லது உத்தரவாதத்தை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியும் அவசியமாகும் - என்றார்.

## பட்ஜெட் வாக்கெடுப்பு...

யோ.தர்மராஜ்

நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த இடைக்கால வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நாடாளுமன்றத்தில் 30ஆம் திகதி முன்வைக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான மூன்று நாள் விவாதம் கடந்த 31, 01 மற்றும் இன்றும் இடம்பெறவுள்ளது.

இன்றைய இறுதிநாள் விவாதத்தையடுத்து இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 13 உறுப்பினர்கள் கடந்த 31ஆம் திகதி சுயாதீனமாக சென்ற நிலையில், அக்கட்சி சாதாரண பெரும்பான்மையையும் இழந்துள்ளது.

எனினும், அரசாங்கத்திற்கு சாதாரண பெரும்பான்மை இருப்பதால், வரவு–'செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என அரச தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், இராஜாங்க அமைச்சுகளை இதுவரை நியமிக்காதமையினால் அரசுக்குள் இருக்கும் சில அதிருப்தியாளர்கள் இன்று எதிர்க்கட்சிக்கு ஆதரவளிப்பதுடன், வரவு – செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பார்கள் எனவும் எதிர்க்கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

## ஈ.பி.எவ். வரிசைக்கு...

தொழில் திணைக்களத்துக்கு சிறிய கோப்பு ஒன்றை கொண்டுவந்தாலும் நாள் முழுவதும் சேவையை பெற்றுக்கொள்ள காத்திருக்க வேண்டியுள்ளது எனவும் நீண்டநேரம் வரிசைகளில் நிற்கவேண்டியுள்ளது என்றும் எமக்கு அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

மக்கள் தமது அலைச்சல் குறித்து குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

அதனால் அவ்வாறான சிரமத்தை தவிர்ப்பதற்காக சேவையை பெற்றுக்கொள்ள முன்பதிவு வசதியை நாம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம். இப்போது மக்களுக்கு அலைச்சல் பிரச்சினை இல்லை. தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு அல்லது இணையத்தின் ஊடாக குறுகியநேரத்தில் தமக்கு வசதியான நேரத்தை ஒதுக்கிக்கொள்ளலாம்.

இந்த வசதியானது தலைமையகத்துக்கு மாத்திரமல்லாது அனைத்து கிளை அலுவலகங்களுக்கும் பொருந்தும். தொழிலாளர் திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளையும் டிஜிட்டல் மயமாக்க நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

முழுமையான தொகையை பெற்றுக்கொள்ளல், 30 வீதமான தொகையை பெற்றுக்கொள்ளல், இறந்தவர்களுடைய தொகையை பெற்றுக் கொள்ளல் மற்றும் தொழில் வழங்குநர்களைப் பதிவுசெய்தல் போன்ற சேவைகளை இதனூடாக பெற்றுக்கொள்ளலாம். இதுவரை தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத் தப்பட்டிருந்த இணையவழி வசதிகள் தற்போது மாவட்ட ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 40 அலுவலகங்கள், 17 உப அலுவலகங்கள் மற்றும் 11 வலய காரியாலயங்களில் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

## விண்வெளியில்...

நெற்பயிர்களை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். அவர்கள் கடந்த ஜூலையில் தொடங்கிய இதற்கான பணிகளில் இரு வகை நெற்பயிர் விதைகளைப் பயன்படுத்தினர்.

இதில், நெற்பயிர் 30 செ.மீ. உயரத்திற்கு வளர்ந்து விஞ்ஞானிகளை ஆச்சரியமடைய செய்துள்ளது.

விண்வெளியில் கதிரியக்கங்கள் அதிகளவில் இருக்கும். இந்தச் சூழலில், தாவரங்களின் செயல்பாடு எவ்வாறு இருக்கும் என அறிவதற்காக சீன விஞ்ஞானிகள் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

அதிக கதிரியக்கங்கள், புவியீர்ப்பு விசையற்ற நிலை போன்ற சுற்றுச்சூழலில் விண்வெளியில் சீன விஞ்ஞானிகள் அரிசியை உற்பத்தி செய்திருப்பது, விஞ்ஞான வளர்ச்சியின் அடுத்த நிலையாக கருதப்படுகிறது.

## சீரற்ற காலநிலை...

நாட்டில் பல பகுதிகளில் தொடர்ச்சியாக மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. அதன்பிரகாரம் மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் யாழ்ப்பாணம், கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடிய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஊவா, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளதாகவும் அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, எட்டு மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறையில் பாலிந்தநுவர பிரதேச செயலகப் பிரிவு, இரத்தினபுரியில் இரத்தினபுரி, எலபாத்த, குருவிட்ட ஆகிய பிரதேச செயலகப் பிரிவு ஆகியவற்றுக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கடன் நெருக்கடியிலிருந்து...

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (01) நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இங்கு கருத்துரைத்த ஜனாதிபதி, இலங்கை வரலாற்றில் இது முக்கியமான படிக்கல்லாகுமெனத் தெரிவித்தார். "வீழ்ச்சியிலிருந்து மீள்வது, கடனை திருப்பிச் செலுத்த அவகாசம் பெறுவது மட்டுமன்றி, சமூக துறைகளைப் பாதுகாப்பது, வாழ்க்கை முறையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவது என்பன முக்கியமாகும்.

அதனைவிட தற்போதைய நிலைமையில் பின்னடைவு ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்வதும் முக்கியமானதாகும். சமூகக் கட்டமைப்பை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய குழுக்களைப் பாதுகாத்தல் என்பவற்றை முன்னெடுக்கும் அதேநேரம் போட்டித்தன்மை மிகுந்த ஏற்றுமதியை அடிப்டையாகக்கொண்ட தொழில் துறையாக நாட்டை மேம்படுத்துவதை புதிய பொருளாதார யுகமாக கருதுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"இதன் ஆரம்பம் கடினமானதாக இருக்கும், ஆனால், நாம் அதனையே பின்தொடர்ந்தால் எம்மால் இன்னும் முன்னேற முடியும். இப்போதைக்கு எது தேவையோ அதுவே எமது அர்ப்பணிப்பாக இருத்தல் வேண்டும். எனினும், இங்கு நாம் எமது இலக்கை அடைவதை மட்டும் குறிக்கோளாக கொண்டிராமல் அதற்கு அப்பாலும் செல்ல வேண்டும்" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

"ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு நம்மை நாம் மாற்றிக்கொள்வோம், இது நமது சமூக சேவைகளை நிலைநிறுத்துவதை எளிதாக்கும்" என்றும் கூறினார்.

இலங்கை தனது கடன்களைக் குறைப்பதற்கும், முடிந்தால் கடன்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் இது ஒரு தொடக்கமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதிகளை 48 மாத காலப்பகுதிக்குள் வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

முழுமையான பொருளாதார ஸ்திரத்தன்மையை மீள ஏற்படுத்துதல், கடன் நிலைத்தன்மையை மறுசீரமைத்தல், நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல், பாதிக்கப்படக்கூடிய குழுக்களை பாதுகாத்தல், ஊழலை ஒழிப்பதற்கு தேவையான கட்டமைப்பு மாற்றங்களை நோக்கி நகர்வதன் மூலம் இலங்கையை முன்னேற்றுதல் என்பன இந்த கடன் வசதியின் நோக்கமாகும்.

இணக்கப்பாட்டின் முக்கிய அம்சங்கள் :

நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் அரச நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் ஊழலைக் குறைத்தல் மற்றும் வலுவான ஊழலுக்கு எதிரான சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துதல்.

சமூக நலனுக்கான செலவினங்களை அதிகரிப்பதன் மூலம் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு தற்போதைய நெருக்கடியின் தாக்கத்தை குறைத்தல், சமூக பாதுகாப்பு கட்டமைப்பு திட்டங்களினுடான பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் பயனா ளிகளை துல்லியமாக அடையாளம் காணுதல்,

அரச நிதியை நிலைப்படுத்த வருவாயை உயர்த்துதல், தனிநபர் வருமான வரியை மேம்படுத்த சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல், நிறுவன ரீதியான வருமான வரி மற்றும் VAT ஆகியவற்றின் நோக்கத்தை விரிவுபடுத்துதல், இந்த வரி சீர்திருத்தங்கள் ஊடாக 2024ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத ஆரம்ப அதிகரிப்பை அடைவதை இலக்காகக் கொள்ளுதல்.

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் அதிகரித்து வரும் நிதி அபாயத்தைக் குறைப்பதற்காக செலவுகளை மீளப்பெறும் வகையில் எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான கட்டணப் பொறிமுறை ஒன்றை அறிமுகப் படுத்துதல்.

## உணவுப் பாதுகாப்பின்மையால் ...

பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய நடுத்தர வருமான நாடுகளைவிட இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் உணவுப் பணவீக்கம் 90 சதவீதத்தை எட்டியுள்ளதால் அது வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புத் திட்டங்களை பாதித்துள்ளதாகவும் இதனால் மில்லியன் கணக்கான மக்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படுகின்றனர் என்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கிட்டத்தட்ட 6.3 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பற்றவர்களாகவும் உதவி தேவைப்படுபவர்களாகவும் இருப்பதாகவும், கிட்டத்தட்ட 1.5 மில்லியன் மக்களுக்கு அவசர உணவு உதவி தேவைப்படுவதாகவும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் குறிப்பிடுகிறது.

## ஐ.எம்.எவ். உதவியூடாக...

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டபோது, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தன விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து அறிவிக்கையில்,

இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற அதிகார மட்டத்திலான பேச்சுவார்த்தைக்கு அமைய, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 4 வருடங்களுக்கு 2.9 பில்லியன் டொலர் விரிவாக்கப்பட்ட கடன் உதவியை வழங்குவதற்கு அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள அரசாங்கத்தினால் முடிந்துள்ளது.

இலங்கை முகங்கொடுத்துள்ள பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முயற்சியில், இது மிக முக்கியமான கட்டமாகும். அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடுகளுக்கமைய, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளினுள் எங்களின் கடன் நிலைபேறான தன்மையை பெற்றுக்கொள்வதற்கு உதவுவதாக, இலங்கைக்கு கடன் வழங்குநர்களின் உறுதிப்பாடு அவசியமாகும். அதன்பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று அதிகாரிகள் மட்டத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வது அவசியமாகும் - என்றார்.

## 134 பேரைக்கொண்டு...

அரசியல் செய்யும்போது சில சில சந்தர்ப்பங்களில் விமர்சனங்கள் வரும், சவால்கள் வரும். எனினும், அதற்கு நாங்கள் முகங்கொடுக்க வேண்டும். அரசியலில் சிஸ்டம் சேஞ்ச் வேண்டும் என உண்மையாக போராடும் இளைஞர்கள் ஒரு பக்கமிருக்க, அவர்களை பயன்படுத்தி தங்களுடைய அரசியல் தேவையை பூர்த்திசெய்துகொள்ளும் அரசியல் கட்சிகளும் இருக்கின்றன. இந்த இரு வேறுபாட்டையும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் பொதுமக்களின் தேவைகளை பூர்த்திசெய்து கொள்ளக்கூடிய பயணத்தை மக்களுடன் முன்னெடுப்போம்.

இதேவேளை, ஜனாதிபதி தெரிவின்போது, கட்சியை விட்டுச்சென்றவர்களை தவிர்த்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளை பெற்றுக்கொண்டார். எனவே, ஜீ.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும ஆகியோர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமானவர்களாகவும் அவரின் வெற்றிக்கு கடுமையாக உழைத்த தலைவர்களாகவும் இருக்கின்றனர். அதேபோன்று, என்னுடைய அரசியல் வாழ்க்கையிலும் அதிக உதவிகளை செய்துள்ளனர். எனினும், தற்போது அவர்கள் வேறு அரசியல் நிலைப்பாட்டில் செயற்படுகின்றனர். அதற்கு நாங்கள் மதிப்பளிக்க வேண்டும் - என்றார்.

## நெருக்கடிக்கு காரணமான...

உண்மைகள் உள்ளன. வரவு – செலவுத் திட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் இடம்பெற்ற வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு – செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து மத்திய வங்கி ஆளுநர் விசேட அறிக்கையொன்றை முன்வைத்துள்ளார். உண்மையில் ஆளுநர் நந்தலால் வீரசிங்க முன்வைத்துள்ள அறிக்கையிலேயே உண்மைகள் உள்ளன. வரவு – செலவுத்திட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன.

"நீர் சூடாகும் வரை மகிழ்ச்சியில் சுற்றித்திரியும் நண்டு" என்ற கருத்தை முன்வைத்தே ஜனாதிபதி தன்னுடைய உரையை ஆரம்பித்து வைத்திருந்தார். ஆனால், இந்த நிலைமையை ராஜபக்ஷக்களே உருவாக்கினர். ராஜபக்ஷ குடும்பம் உள்ளிட்ட மொட்டு கட்சியின் ஆட்சியே மிக மோசமான பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடி நெருப்பை உருவாக்கியது.

இதேவேளை, மகிழ்ச்சியாக இருக்கும் நண்டு எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அதாவது, அமைதியாக போராட்டம் நடத்தியவர்கள் மீதும் போராட்டத்தின் மீதும் மே 9ஆம் திகதி அலரிமாளிகையில் இருந்து மிலேச்சத்தனத்தையும் வன்முறையையும் துண்டிவிட்ட ராஜபக்ஷக்களே மகிழ்ச்சியில் இருக்கும் நண்டுகளாகும்.

மகிழ்சியாக இருக்கும் நண்டு, வெள்ளைப்பூடு மோசடி, சீனி மோசடி, எண்ணெய் மோசடிகளையும் செய்துள்ளது. எனவே, ஜனாதிபதிக்கு இந்த உரையை யார் எழுதிக்கொடுத்தது என்பது எனக்கு தெரியவில்லை. நீர் சூடாகும் வரை மகிழ்ச்சியாக இருக்கும் நண்டுகளுக்கு தற்போதைய ஜனாதிபதியே பாதுகாப்பு வழங்குகின்றார். எனவே, ஜனாதிபதி உரையானது மக்களை திசைதிருத்தும் மாயையாகும். இது கடந்த காலத்தில் கபடத்தனமாகும். அதாவது, நாகராஜா கபடத்தனமாகும்.

நிதி ஸ்திரத்தன்மை பற்றி எவ்வித கருத்துகளும் இல்லை. பணவீக்கத்துக்கு முகங்கொடுப்பதற்கான தீர்வு, வரிச் சுமை சீர்திருத்தம் தொடர்பாகவும் எவ்வித கருத்துகளும் இல்லை – என்றார்.

## சமூக கொடுப்பனவுளை...

கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நல்லாட்சி அரசின்போது, நாம் அதற்கு முந்தைய ராஜபக்ஷ அரசின் ஊழல் பேர்வழிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தோம். இந்த ஆட்சி வந்ததும் அந்த வழக்குகள் பற்றி ஒரு ஆணைக்குழு அமைத்தீர்கள். அந்த ஆணைக்குழு இவர்களை நிரபராதிகள் என அறிக்கை தந்தது. அதை அடிப்படையாகக்கொண்டு சட்ட மா அதிபர் அந்த வழக்குகளை வாபஸ் வாங்கினார். எனவே, இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு, சாட்சிகள் அழைக்கப்பட்டு, அவர்கள் எவரும் வழக்குகளில் இருந்து விடுவிக்கப்படவில்லை. இதை தெளிவாக அறிந்துகொள்ளுங்கள்.

தமது உரையில் ஜனாதிபதி 19ஆம் அத்தியாயத்தில் என்ன சொல்கிறார்? இதோ வாசிக்கிறேன். "சமூக நலன்புரி பதிவகம் ஒன்றை தாபிக்க தரவு சேகரிப்பு இப்போது நடைபெறுகிறது. பக்கச்சார்பற்ற ஊர்ஜிதப்படுத்தக்கூடிய அளவுகோல்கள் மூலம் பயனாளிகளை அடையாளம் காணும் புதிய பொறிமுறை தாபிக்கப்படுகிறது" என்று ஜனாதிபதி, நிதி அமைச்சர் என்ற வகையில் கூறுகிறார்.

இது நல்லது. நான் ஒருபோதும் இலவச கொடுப்பனவுகள் வழங்கும் கொள்கையை ஆதரிப்பவன் அல்ல.

இன்று சமுர்த்தியாக இருக்கலாம், வேறு கொடுப்பனவுகளாக இருக்கலாம், இவற்றை பெறும் பயனாளிகள் பெயர்ப் பட்டியலில், வசதி உள்ளவர்கள், அதாவது உதவி பெற தகைமை இல்லாதோர் கணிசமாக இருக்கிறார்கள். அதேவேளை, உதவி பெறவேண்டிய குறை வருமானம் கொண்ட, குறை சந்தர்ப்பங்கள் கொண்ட பிரிவினர் பட்டியலில் இல்லாமல் இருக்கிறார்கள்.

இத்தகைய உதவி தேவைப்படும் பெருந்தொகை மக்கள், மலைநாட்டு தோட்டங்களில் கஷ்ட வாழ்க்கை வாழ்கிறார்கள். கொழும்பு மாநகரத்தில் கஷ்டப்படும் நகர ஏழைகளாக வாழ்கிறார்கள். இவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரணங்களை, வேறு பிரிவினர் பெறுகிறார்கள் - என்றார்.

## சீனாவிடமிருந்து உரமும்...

பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளையும் முன்னெடுத்தோம். எனினும், இந்த இரு முயற்சிகளும் தோல்விடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் விவசாயம் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சேதனப் பசளை மாத்திரமே விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தினால் நாங்கள் எதிர்பார்த்த நெல் விளைச்சலை பெற முடியாது போனமையினால், மீண்டும் இரசாயன உரத்தை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இதனால், எதிர்வரும் பெரும் போகத்துக்குத் தேவையான சேதன மற்றும் இரசாயன பசளைகளை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நெல் விளைச்சலுக்கு வழங்கப்படும் இரசாயன உரத்தை 30 வீதத்தால் குறைத்து, அதற்கு தேவையான போசனையை வழங்கும் வகையில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத உரத்தை அரசாங்க விவசாயத் திணைக்களத்தினால் மானிய முறையில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உத்தராதமளிக்கும் வகையில் சேதனப் பசளை உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தாலும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத உரத்தைக்கொண்டு நெல் விளைச்சலை முன்னெடுப்பதற்கும் இரசாயன உரத்துக்கு செலவழிக்கும் நிதியைக்கொண்டு சேதனபங பசளைகளை பெற்றுக்கொள்வதற்கும் விவசாயிகளுக்கு முடியும்.

இரசாயன உரத்தை பயன்படுத்தாது, விஷமில்லாத உணவை உற்பத்திசெய்வதற்கான சேதனப் பசளையை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு மேலதிகமான மானியத்தை வழங்குவதற்கான திட்டத்தையும் முன்னெடுத்துள்ளோம்.


இதேவேளை, க்ளைபோசெட் தடை செய்யப்பட்டிருந்தாலும் இன்று அனைத்து கடைகளிலும் இதனை பெற்றுக்கொள்ள முடியும். எனினும், விலை அதிகமாகும். பல்வேறு நாடுகளிலிருந்து திருட்டுத்தனமாக கொண்டுவந்து விநியோகிக்கும் சில நிறுவனங்களால், தரம் குறைந்த க்ளைபோசெட் உரத்தை அதிக விலைக்கு கொள்வனவு செய்யவேண்டியுள்ளது.

இந்த நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ள அனைத்து இரசாயனங்களும் ஏனைய அனைத்து நாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. எங்களை விட தரம் குறைந்த உரத்தைப் பயன்படுத்தி, உற்பத்தி செய்யப்பட்ட அரிசியை கொண்டுவந்து இன்று எங்களுடைய நாட்டு மக்களுக்கு வழங்குகின்றோம்.

இதேவேளை, சீன உரக்கப்பலுக்குநிதி செலுத்தப்பட்டது குறித்து ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கப்பலுக்கு செலுத்தப்பட்டுள்ள 6.9 மில்லியன் டொலரை மீள பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், அதற்கான வாய்ப்பு இல்லாதமையினால், அதற்குப் பதிலாக இரசாயன உரத்தை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளையும் முன்னெடுத்தோம். எனினும், இந்த இரு முயற்சிகளும் தோல்விடைந்துள்ளன. இதனையடுத்து, அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து சட்டமா அதிபரும் பரிந்துரைத்துள்ளார் - என்றார்.

# பொருளாதார எழுச்சி பற்றிய நம்பிக்கையினை சமூகமயப்படுத்த வேண்டியது அவசியம்

## அந்நியச் செலாவணியை ஈட்ட நிலைபேறான செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருவதாக டக்லஸ் சபையில் தெரிவிப்பு



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து மீள்வது எவ்வாறு என்பது குறித்து சிந்தித்து, செயற்படுவதுதான் சாலச் சிறந்த செயற்பாடாகும் என்பதுடன், பொருளாதார மீள்ச்சி குறித்த நம்பிக்கையினை சமூகமயப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டின் அந்நியச் செலாவணி கட்டமைப்பினை அதிகரித்துக் கொள்வதற்கு பங்களிப்பு வழங்கும் வகையில், ஏற்றுமதியின் ஊடாக அதிகளவு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்கின்ற நிலைபேறான செயற்றிட்டங்களை கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது எனவும் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் நேற்று (01.09.2022) கலந்துகொண்டு உரையாற்றும் போதே கடற்றொழில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பேர்ள் எக்ஸ்பிரஸ் கப்பல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அடுத்தகட்ட நிவாரணங்களை விரைவில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள், கடற்றொழில் அமைச்சை அல்லது சம்பந்தப்பட்ட கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர்களை தொடர்புகொள்ள வேண்டும்.

இன்றைய பொருளாதார நிலையிலிருந்து மீள்வதற்காக குறுகிய மற்றும் நீண்டகால நடைமுறைச் சாத்தியமான திட்டங்களை முன்வைத்து, இந்த இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருப்பது, நாட்டின் தலைவர் என்ற வகையில் முன்மாதிரி செயற்பாடாக இருக்கிறது. இத்தகைய செயற்பாடுகளுக்கு போதிய பங்களிப்பு வழங்கும் வகையில், ஏற்றுமதியின் ஊடாக அதிகளவு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்கின்ற நிலைபேறான செயற்றிட்டங்களை கடற்றொழில் அமைச்சு பரவலாக முன்னெடுத்து வருகின்றது .

கடலட்டைப் பண்ணைகளை விஸ்தரித்தல், அதற்கென கடலட்டை கருத்தரிப்பு நிலையங்களை ஸ்தாபித்தல், குஞ்சு வளர்ப்பு மையங்களை ஸ்தாபித்தல், ஏற்றுமதி சார்ந்த இறால் வளர்ப்பு, கடல் பாசி வளர்ப்பு, அது சார்ந்த பெறுமதிசேர் ஏற்பாடுகள், சங்கு உற்பத்தி மேம்பாடு போன்ற வேலைத்திட்டங்கள் பொருத்தமான இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

அத்துடன், கடலுணவு வகைகளை ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக நாம், பலநாட் கலங்களுக்கும் தேவையான வசதிகளை வழங்கி, வலுப்படுத்தி வருகின்றோம்.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட காலங்களில் கூட, மாற்று ஏற்பாடுகளை முன்னெடுத்து, ஏற்றுமதி சார்ந்த கடலுணவு உற்பத்தியில் ஈடுபடுகின்ற பலநாட் கலங்கள் தொடர்ந்து தொழிலில் ஈடுபடுவதற்கான வழிகளை நாம் வகுத்துக் கொடுத்திருந்தோம்.

நன்னீர் வேளாண்மை சார்ந்து இந்த வருடத்தில் இதுவரையில், நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்கள் தோறும் 1044 பாரிய, நடுத்தர, சிறிய குளங்கள் மற்றும் பருவகால நீர்நிலைகளில் 14,70,42,543 ரூபா செலவில், 5,26,75,300 மீனினக் குஞ்சுகளை வைப்பில் இட்டுள்ளோம்.

இப்போது தாராளமாக இல்லையெனினும், மண்ணெண்ணெய் பரவலாக நாடு முழுவதுமாக கிடைத்து வருகின்றது என நினைக்கிறேன். அதேவேளை, மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றை தனியார் மூலமாகவும் இறக்குமதி செய்து, கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் தாராளமாக கிடைப்பது உறுதிப்படுத்தப்படும் என்பதுடன் மண்ணெண்ணெய் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு மானியம் கிடைப்பதற்கும் ஏதோவொரு வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும், பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனும் கலந்துரையாடியதன் பயனாக இம்முறை இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கும், அதேநேரம் மின்சார வசதியற்ற மலையக மக்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கென 5.000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எமது கடற்றொழிலாள மக்கள் மற்றும் மலையக மக்கள் சார்பில் ஜனாதிபதியும், நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேநேரம், இந்திய இழுவை வலைப்படகுகளின் ஆக்கிரமிப்பு தொடருமானால் 2018ஆம் ஆண்டு சட்டத்தின் பிரகாரம் ஏற்கனவே அரசுடமையாக்கப்பட்டுள்ள இந்திய இழுவை வலைப் படகுகளை அவற்றின் தொழில் முறைமையை மாற்றி எமது கடற்றொழிலாளர்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க இருப்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்" - என்றார்.

# பணப்பையை தவற விட்ட நோயாளி: மீட்டுக் கொடுத்த காவலாளி!

(திருமலை நிருபர்)



திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த பெண் நோயாளியின் பணப்பை தவறுதலாக விழுந்ததால் அவர் அழுதவண்ணம் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் திருகோணமலை பொது வைத்தியசாலை பாதுகாப்புப் பிரிவினருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து குறித்த நோயாளியிடம் தகவல்கள் பெறப்பட்டு உடனடியாக பெண் காவலாளி தவறிய பணப்பையை தேடிக் கொடுத்துள்ளார்.

புல்மோட்டை பிரதேசத்திலிருந்து புற்றுநோய் சிகிச்சைக்காக வருகை தந்த சந்தர்ப்பத்திலேயே நோயாளியான அசனார் லெப்பை இஸ்றுல் பிரமினா (61 வயது) அவருடைய பணப்பையும் அதில் ஒரு தொகை பணமும் காணாமல் போயுள்ளது.

இதனையடுத்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் நிரஞ்சலா சுஜீவனி என்ற பெண் பாதுகாப்புக் காவலாளி 7190 ரூபா பணத்தையும் அவரது அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் சிலவற்றையும் வைத்தியசாலை பொலிஸார் முன்னிலையில் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த பெண் தனது பணப்பையை தேடி தந்தமைக்கு வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை காரியாலயத்திலிருந்து சடலம் மீட்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)




ஐக்கிய மக்கள் சக்தி கேகாலை தேர்தல் தொகுதி அமைப்பாளரின் காரியாலயத்தில் கடமையாற்றிய பெண் ஒருவரின் சடலம் நேற்று துப்பாக்கிச்சூட்டு காயத்துடன் மீட்கப்பட்டுள்ளது.

கேகாலை நகரின் கலுகல்ல வீதியில் அமைந்துள்ள காரியாலயத்தில் பணியாற்றிய ஹபுதுகல பகுதியில் வசிக்கும் 38 வயதான பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் மேற்படி காரியாலய அறை ஒன்றில் காணப்பட்டதாகவும் இவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்துகொண்டாரா என்ற விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மாதிவெல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஜீப் விபத்து





விபத்தில் காயங்களுக்குள்ளான எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர் ஒருவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த அதிசொகுசு ஜீப் ரக வாகனம் மோதியதால் முச்சக்கரவண்டி மற்றும் ஸ்கூட்டர் என்பன பாரதூர சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

விபத்து தொடர்பில் ஜீப் ரக வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மிரிஹானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





கொழும்பு, மாதிவெலயிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் ஜீப் ரக வாகனமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

# சாவகச்சேரி நீதவான் நீதிமன்றிலிருந்து சந்தேகநபர்கள் இருவர் தப்பியோட்டம்

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றிலிருந்து இரு சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர். அவர்களில் ஒருவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மற்ற சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் தப்பியோடியவர்களை சிறைக்காவலர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து துரத்தியபோது ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், மற்றையவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். மேலும், தப்பிச் சென்றவரை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜெயராஜ் கொலைவழக்கு சந்தேக நபர்கள் விடுதலை

### கம்பஹா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்ட 16 பேரை கொலைசெய்ததாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த அப்போதைய கம்பஹா பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் குரே மற்றும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் எனக் கூறப்படும் மொரிஸ் என்றழைக்கப்படுகின்ற செல்வராஜா கிருபாகரன் ஆகியோர் குற்றச்சாட்டுகளிலிருந்து முற்றாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா மேல் நீதிமன்றத்தில் முதலாம் இலக்க அறையில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின்னர் நீதிபதி சஹான் மாபா பண்டார வழக்கின் தீர்ப்பை நேற்று (01) அறிவித்தார்.

2008ஆம் ஆண்டு ஏப்ரல் 06ஆம் திகதி வெலிவேரிய காந்தி விளையாட்டரங்கிற்கு அருகில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்ட 16 பேர் கொலை செய்யப்பட்டனர்.

2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி அப்போதைய கம்பஹா பொலிஸ் அத்தியட்சகராக செயற்பட்ட லக்ஷ்மன் குரே, குறித்த குண்டுத் தாக்குதலுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாகன தரிப்பிடத்திலிருந்த மோட்டார்சைக்கிள் திருட்டு

### சந்தேகநபர் பொலிஸாரால் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரிலுள்ள பினாஸ் கம்பனி ஒன்றின் வாகன தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்றை திருடிச் சென்ற களுவாஞ்சிக்குடியை சேர்ந்த நபரொருவர் வவுனியாவில் வைத்து நேற்று முன்தினம் (31) கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட மோட்டார்சைக்கிள் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் மீட்கப்பட்டதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பினாஸ் கம்பனியில் கடமையாற்றிவரும் ஒருவர் அங்குள்ள வாகன தரிப்பிடத்தில் கடந்த 26ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு மோட்டார்சைக்கிளை நிறுத்திவிட்டு பஸ்ஸில் வீட்டுக்கு சென்று 29ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் காரியாலயத்துக்கு வந்து வாகன தரிப்பிடத்துக்கு சென்றபோது மோட்டார்சைக்கிள் திருட்டுப் போயுள்ளமை தெரியவந்துள்ளதையடுத்து. 30ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்பெக்டர் எம்.ஜி.பி.எம்.எம். ஜெகுலி தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணையை மேற்கொண்டுவந்தனர். இதன்போது மோட்டார்சைக்கிளை திருடிச் சென்ற களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரை வவுனியாவில் கடை ஒன்றில் வேலை செய்துவரும் நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# எரிபொருள் விலை குறைவடையாது

### அமைச்சர் காஞ்சன

(யோ.தர்மராஜ்)

நாட்டில் எரிபொருள் சூத்திரத்துக்கமைய செப்டெம்பர் முதலாம் திகதி எரிபொருள் குறைவடைய வேண்டும் என்றாலும் தற்போதைய இறக்குமதி விலைக்கமைய எரிபொருள் விலை குறைவடையாது - என எரிசக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இடைக்கால வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி கொடுத்தே எரிபொருளை பெற்றுக்கொண்டால், எவ்வாறு நிறுவனம் நட்டமடையும் என மக்கள் கோருகின்றனர். இது சாதாரண கேள்வியே. ஆனால், எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு இவ்வளவு நிதி செலவாகின்றதென இதுவரை மக்களுக்கு நாங்கள் கூறியதில்லை.

மண்ணெண்ணெய் போன்றவற்றை இறக்குமதி செய்யும் விலையை விட குறைந்த விலையிலேயே வழங்கினோம். குறிப்பாக, 360 ரூபா செலவாகும் மண்ணெண்ணெயை 87 ரூபாவிற்கு வழங்கினோம். எனவே, வருமானம் குறைந்த மற்றும் மண்ணெண்ணெய் தேவையாகவுள்ள தரப்பினருக்கு மானியம் வழங்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

எரிபொருள் விலைக்காக விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். அது மேலும் வலுப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இந்நிலையில், உலக எரிபொருள் விலைக்கு அமைய இன்று (நேற்று) நள்ளிரவு முதல் எரிபொருள் விலை குறைவடைய வேண்டும் எனக் கூறுகின்றனர்.

ஆனால், உலக சந்தையின் விலை குறித்த பேசினாலும், எங்களுடைய நாட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு செயற்பாடுகள் ஆரம்பித்து இரு வாரங்களேயாகின்றன. கடந்த காலத்திலுள்ள கசிவு எண்ணெய் விலைக்கும் தற்போதுள்ள கசிவு எண்ணெய் விலைக்கும் அமைய எரிபொருள் விலை குறைவடைய வேண்டும் எனக் கூற முடியாது.

எனவே, எரிபொருள் விலை சூத்திரத்திற்கமைய விலை குறையும்போது அதன் பிரதிபலனை மக்களுக்கு வழங்கவும் விலை அதிகரிக்கும்போது, நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் விலை திருத்தத்தை மேற்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

எனவே, முதலாம் திகதி விலை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றாலும் தற்போதிருக்கும் இறக்குமதி விலைக்கும் அமைய எரிபொருள் விலை திருத்தத்தினால் இன்று (நேற்று) எரிபொருள் விலை குறைவடையும் என எதிர்பார்க்க முடியாது.

எதிர்காலத்தில் சுத்திகரிப்பு செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்கும்போது, அதன் பிரதிபலனை மக்களுக்கு வழங்குவோம் - என்றார்.


## சியரா கேபள்ஸ் பிஎல்சியின் வருடாந்த பொதுக்கூட்டத்தின் அறிவிப்பு (பதிவு எண் : PQ 166)

Sierra Cables PLCஇன் 19ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாட்டில் நிலவும் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு கொழும்பு பங்குச் சந்தையினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக 23 செப்டம்பர் 2022 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு LOLC ஹோல்டிங்ஸ் பிஎல்சி, எண்.100/1இல் ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய விலாசத்தில் இணையவழி ஒலி மற்றும் ஒளி சந்திப்பாக நடைபெறும்.

**தற்போதுள்ள சூழ்நிலைகளின் கீழ் சந்தையில் காகிதம் மற்றும் தொடர்புடைய பொருட்கள் குறைவாக இருப்பதால், அச்சிடப்பட்ட வடிவத்தில் 2021/22 ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையை விநியோகிப்பது சாத்தியமில்லை என்று கருதப்படுகிறது.**

எனவே, மார்ச் 31, 2022இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் வருடாந்திர அறிக்கை மற்றும் ஒன்லைன் பதிவு செயல்முறை குறித்த அறிவிப்பு, பதிலாள் மற்றும் பதிவுப் படிவம் உள்ளிட்ட பங்குதாரர்களுக்கு இணைக்கப்பட்ட சுற்றறிக்கை நிறுவனத்தின் இணையதளத்தில் பார்வையிட/பதிவிறக்கக் கிடைக்கும் https:// www.sierracables.com/investor-relations/ மற்றும் கொழும்பு பங்குச் சந்தை இணையத்தளம்.https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=SIRA.N0000 இல் பங்குபெற விரும்பும் பங்குதாரர்கள், மேலே குறிப்பிட்டுள்ள தளங்களிலிருந்து தேவையான படிவங்களைப் பதிவிறக்கம் செய்து, ப்ரொக்ஸி மற்றும் இணைப்பு I ஐப் பங்குதாரர் சுற்றறிக்கையில் பூர்த்திசெய்து, corporateservices@lolc.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது + 94 11 2307380 தொலைநகலுக்கு 48 மணிநேரத்திற்கு குறையாமல் அனுப்பவேண்டும். பின்னர் அவ்வாறு வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளுக்குகூடாக உள்நுழைவு தகவல் அனுப்பப்படும்.

இது தொடர்பான மேலதிக வினவல்களுக்கு, நிறுவனத்தின் செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள திருமதி தயானி தனபால அல்லது திருமதி ஷஃப்னா அஜிரீனைத் தொடர்புகொள்ளவும்:
**தொலைபேசி: +94 11 5063000 (தொடர் - . 3308/3307)**
**மின்னஞ்சல்:** corporateservices@lolc.com

இந்த நெருக்கடியான காலங்களில் ஒத்துழைப்பு வழங்கிய நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு சபை நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

சபையின் உத்தரவின்படி
**சியரா கேபள்ஸ் பிஎல்சி**

**எல்.ஓ.எல்.சி. கோர்ப்பரேட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்**
**செயலாளர்கள்**
செப்டம்பர் 1, 2022

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, செப்டெம்பர் 02ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# மிக்கைல் கொர்பச்சேவ்

பனிப்போரை இரத்தம் சிந்தாமல் முடிவுக்குக் கொண்டுவர உதவிய சோவியத் யூனியனின் 8ஆவது மற்றும் கடைசி ஜனாதிபதி மிக்கைல் கொர்பச்சேவ் உடல்நலக் குறைவு காரணமாக ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவிலுள்ள மருத்துவமனையில் காலமானார். முன்னைய காலங்களில் கொர்பச்சேவ் என்ற பெயர் இல்லாத வெளிநாட்டு செய்திகள் இல்லை என்ற நிலைமை இருந்தது.

ரஷ்யா உள்ளிட்ட நாடுகளை உள்ளடக்கிய சோவியத் யூனியனின் ஜனாதிபதியாக 1985 முதல் 1991ஆம் ஆண்டுவரை பதவி வகித்தவர் மிக்கைல் கொர்பச்சேவ். அதே காலகட்டத்தில் சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் பதவியில் இருந்தார்.

மொஸ்கோவிலுள்ள நோவோடெவிச்சி கல்லறையில் அவரது மனைவிக்கு அருகில் மிக்கைல் கொர்பச்சேவ் உடல் அடக்கம் செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மொஸ்கோ அரச பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது, 1955இல் சட்டப் பட்டம் பெறுவதற்கு முன்பு 1953ஆம் ஆண்டில் சக மாணவியான ரைசா தைத்தாரென்கோவை அவர் மணமுடித்தார்.

தொடக்கத்தில் மார்க்சிச-லெனினிசக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும், 1990களின் முற்பகுதியில் சமூக ஜனநாயகத்தை நோக்கிச்சென்ற மிக்கைல் கொர்பச்சேவின் சீர்திருத்தக் கொள்கைகள் பனிப்போரை இரத்தம் சிந்தாமல் முடிவுக்குக் கொண்டுவந்ததில் முக்கியப் பங்காற்றின. 1990இல் அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

சோவியத் அரசையும் அதன் சோஷலிசக் கொள்கைகளையும் பாதுகாப்பதில் உறுதியாக இருந்தபோதிலும், குறிப்பாக, 1986 செர்னோபில் அணுவாயுத பேரழிவிற்குப் பிறகு குறிப்பிடத்தக்க சீர்திருத்தம் அவசியம் என்று மிக்கைல் கொர்பச்சேவ் நம்பினார். சோவியத், ஆப்கான் போரிலிருந்து விலகி, அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தவும், பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவரவும் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகனுடன் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டார்.

மிக்கைல் கொர்பச்சேவின் கொள்கைகள் ரஷ்யாவில் கருத்துச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் ஆகியவற்றை மேம்படுத்த உதவியது. தடையில்லாத பொருளாதாரத்தைக் கொண்டுவந்து ஐரோப்பிய நாடுகளுடன் நட்புறவு கொண்டார். 1989 - 1990இல் பல்வேறு கிழக்கு ஐரோப்பிய சோவியத் உறுப்புநாடுகள் மார்க்சிச-லெனினிச ஆட்சியைக் கைவிட்டபோது இராணுவ ரீதியாக தலையிட மிக்கைல் கொர்பச்சேவ் மறுத்துவிட்டார்.

உள்நாட்டில் வளர்ந்துவந்த தேசியவாத உணர்வு சோவியத் ஒன்றியத்தை உடைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. மார்க்சிச-லெனினிசக் கடும்போக்குவாதிகள் 1991 ஓகஸ்ட் மாதத்தில் கொர்பச்சேவுக்கு எதிராக நடத்திய ஆட்சிக்கவிழ்ப்பு சதி தோல்வியுற்றது. இதைத் தொடர்ந்து, கொர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் ஒன்றியம் கலைந்ததையடுத்து அவர் தனது பதவியைத் துறந்தார். அதன்பிறகு தன் பெயரில் அறக்கட்டளை ஒன்றை தொடங்கினார்.

ரஷ்யாவில் சமூக ஜனநாயக இயக்கத்திற்காக பிரசாரம் செய்த அவர், ரஷ்ய ஜனாதிபதிமார் பொரிஸ் யெல்ட்சின், விளாடிமிர் புட்டின் ஆகியோரை கடுமையாக விமர்சிக்கவும் தயங்கியதில்லை. விளாடிமிர் புட்டின் 2011ஆம் ஆண்டில் 3ஆவது முறையாக ரஷ்ய ஜனாதிபதியாக பொறுப்பேற்கக்கூடாது என்று வெளிப்படையாக விமர்சித்தார்.

20ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் குறிப்பிடத்தக்க ஆளுமைகளில் ஒருவராகக் கருதப்பட்ட மிக்கைல் கொர்பச்சேவ், சோவியத் ஒன்றியத்தில் புதிய அரசியல், பொருளாதார சுதந்திரங்களை அறிமுகப்படுத்தியது, அவரின் வெளியுறவுக் கோட்பாடுகள் என்பன உள்ளிட்ட அவரது கொள்கைகளுக்காக பரவலாகப் பாராட்டப்பட்டார். ஆனாலும், சோவியத் கலைப்பை விரைவுபடுத்தியதற்காகவும், அதனால் ரஷ்யாவின் உலகளாவிய செல்வாக்கில் சரிவைக் கொண்டுவந்து பொருளாதார சரிவை தூண்டியதற்காகவும் ரஷ்யாவிலும், முன்னாள் சோவியத் நாடுகளாலும் தொடர்ந்து விமர்சிக்கப்பட்டு வந்தார். சோவியத் யூனியனுக்கும், மேற்கத்தேய நாடுகளுக்கும் இடையே 2ஆம் உலகப் போருக்குப்பின் பனிப்போர் நீடித்தது. இதை முடிவுக்குக் கொண்டுவந்து சோவியத் யூனியனை ஐரோப்பாவுக்கு நெருக்கமாகக் கொண்டுவந்தார். இது சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்ததாக ரஷ்யாவின் தீவிர கம்யூனிஸ்ட்டுகள் குற்றஞ்சாட்டுகின்றன.

கடைசி சோவியத் தலைவராக கொர்பச்சேவ் அமெரிக்காவுடனான ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களையும், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவைப் பிளவுபடுத்திய இரும்புத்திரையை அகற்ற மேற்கு நாடுகளுடன் கூட்டு ஒப்பந்தங்களையும் செய்தார். இது மேற்கு மற்றும் கிழக்கு ஜேர்மனியை மீண்டும் ஒன்றிணைத்தது. பேர்லின் சுவர் தகர்ப்புக்கு உதவியது. இதனால், இன்னமும் அப்பகுதி மக்களால் 'கோர்பி' என்று அன்போடு அழைக்கப்படுகிறார்.

கொர்பச்சேவ் தனது பதவிக்காலத்தில் சீர்திருத்தங்களை ஒவ்வொன்றாக அறிமுகப்படுத்தினார். சிறைக்குள் அடைக்கப் பட்டிருந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்தார். நாட்டு மக்களுக்கு பல்வேறு உரிமைகளை வாரி வழங்கினார். மதத்துக்கு எதிராக அதுவரை இருந்த அரசின் அடக்குமுறைகளை நீக்கினார். பல கட்சி தேர்தல் முறைமையைக் கொண்டுவந்தார். மேற்கத்திய நாடுகளுடன் உறவை மேம்படுத்தினார்.

இது போன்ற சீர்திருத்தங்கள் சோவியத் யூனியனை மேலும் வலுப்படுத்தும் என்று அவர் நம்பினாலும், உண்மையில் அவை எதிர்வினையையே ஏற்படுத்தின.

அவர் அளித்த அரசியல் சுதந்திரத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் - கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அதுவரை இருந்த அடக்குமுறை நீக்கப்பட்டதால் இனக் குழுக்களிடையே மோதல்கள் வெடித்தன. தொலைதூரங்களில் இருந்த சோவியத் யூனியன் காலனி நாடுகள் சுதந்திரம் பெறுவதாக அறிவித்தன.

இதனால் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி இறுதியில் சோவியத் யூனியன் சிதறுண்டது. இது குறித்து மிக்கைல் கொர்பச்சேவ் பின்னர் கூறுகையில், சீர்திருத்த நடவடிக்கைகள் எதிர்பார்த்ததைவிட மிகச் சிக்கலாக இருந்ததை பின்னர் தான் தெரிந்துகொண்டதாகக் குறிப்பிட்டார். எனினும், 'அந்த சீர்திருத்தங்களால் பொதுமக்களுக்கு சுதந்திரம் கிடைத்தது; அரசியல் ரீதியலும், மத ரீதியிலும் சமூகம் விடுதலை பெற்றது. இதுதான் சீர்திருத்த நடவடிக்கைகளின் முக்கிய சாதனை என்று அவர் கூறினார்.

இப்போதுகூட உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலையும், ரஷ்யா மீதான மேற்குலகத்தின் அழுத்தங்களையும் கண்டு கொர்பச்சேவ் உள்ளூர மனம் நொந்திருக்கக்கூடும். ஆனால், உலக நாடுகளின் தலைவர்களுக்கு கொர்பச்சேவின் வாழ்க்கை பல பாடங்களை தந்திருக்கிறது. அதில் நல்லவற்றை உள்ளீர்த்துக்கொள்வது நல்லதல்லவா..!

# அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கவேண்டிய மூன்று செயற்பாடுகள்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்புவதற்கு வசதியான ஏற்பாடுகளைச் செய்து அவரை பிரதமராக நியமிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு ஆளும் கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் ஜூலையில் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டதை அடுத்து முன்னாள் ஜனாதிபதி நாட்டிலிருந்து வெளியேறினார். அவர் தஞ்சம் கோரி நாடு விட்டு நாடு அலைவதைக் காண பலரும் விரும்பவில்லை.

போராட்ட இயக்கத்தை ஆதரித்தவர்கள் கூட அவர் நாடு திரும்புவதை எதிர்க்கப் போவது சாத்தியமில்லை. ஆனால், அரசியல் விவகாரங்களில் அவர் தீவிரமாக பங்கேற்பதை ஊக்கப்படுத்தும் எந்தவொரு முயற்சியும் சர்ச்சைக்குரியதாகவே இருக்கும் என்பதுடன் "கோட்டா கோ ஹோம்" போராட்டத்தின் பிரதான குறிக்கோளுக்கு எதிரானதுமாகும்; அரசாங்கத்தையும் வலுவிழக்கச் செய்யும்.

பெரும்பாலான அதிகாரங்களை தன்வசம் வைத்திருந்த அரசியல் தலைவர் என்றவகையில், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பானவர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதியே போராட்ட இயக்கத்தின் பிரதான இலக்காக இருந்தார். இரசாயன உரவகைகளைத் தடை செய்து இரவோடிரவாக இலங்கையின் விவசாயத்தை இயற்கை விவசாயமாக மாற்றுவதற்கு அவர் மேற்கொண்ட தவறான ஆலோசனையின் அடிப்படையிலான தீர்மானம் போன்ற வேறு காரணங்களும் இருக்கின்றன. அந்தக் கொள்கை ஒருசில மாதங்களுக்குள்ளாகவே விவசாயிகளுக்கு பெரும் அவலத்தை ஏற்படுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும், முன்னாள் ஜனாதிபதியை பிரதமராக்குவது, அரசாங்கத்திற்குள் செல்வாக்குமிக்க பிரிவொன்றின் தலைவராக விளங்குபவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனிப்பட்ட முறையில் நெருக்கமானவருமான தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவை பதிலீடு செய்வதாகவே அமையும். விக்கிரமசிங்கவுடனான அவரின் நெருக்கம் இருவரும் இணைந்து செயற்படுவதற்கு வசதியான சூழ்நிலையையும் ஏற்படுத்தி யிருக்கிறது. ஜனாதிபதிக்கு ஏதாவது நேர்ந்தால் அவரின் இடத்துக்கு வருபவர் பிரதமர் என்ற முறையில் இந்த விவகாரம் மீது இறுதி முடிவெடுப்பதில் அவரும் ஒரு பங்கை வகிக்கும் சாத்தியம் இருக்கிறது எனலாம்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்களை அமைச்சர்களாக நியமிக்குமாறு விடுக்கப்பட்டிருக்கும் மற்றைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்வது ஜனாதிபதியைப் பொறுத்தவரை கஷ்டமானதாக இருக்கும். அவர்களில் பலர் பெருமளவு ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களாக இருப்பதுடன், போராட்ட இயக்கத்தின் முக்கிய கவனத்துக்குரியவர்களாகவும் விளங்கினர். தற்போது மீண்டும் அமைச்சர்களாக வரவேண்டும் என்று விரும்புபவர்கள் முன்னர் அரசாங்கத்தில் வகித்த பதவிகளிலிருந்து இராஜினாமா செய்தவேளையில் பிரதமர் பதவியை பொறுப்பேற்பதற்கு விக்கிரமசிங்க முன்வந்தமை குறித்து அவர் மீது கடுமையான அதிருப்தியும் ஏற்கனவே இருக்கிறது.

அந்த நேரத்தில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றதால் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களைச் செய்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள் என்று மக்கள் மத்தியில் எண்ணம் ஏற்பட்டது. அந்த எண்ணம் தொடர்ந்தும் இருக்கிறது. இப்போது மீண்டும் அவர்கள் அமைச்சர்களாக வந்தால் அதற்கான சூழ்நிலை உருவாக காரணமாக இருந்தவர் ஜனாதிபதியே என்ற எண்ணம் வலுப்பெறும். தங்களுக்கு மீண்டும் அமைச்சர் பதவிகள் தரப்படவேண்டும் என்று விரும்புபவர்கள் தங்களுக்கு வாக்களித்து அதிகாரத்துக்கு கொண்டுவந்த மக்கள் மத்தியில், தாங்கள் நம்பிக்கையையும் நியாயப்பாட்டையும் இழந்துவிட்டதை விளங்கிக்கொள்ளவில்லை என்றே தெரிகிறது. அவர்கள் தங்களது தொகுதிகளுக்கு சென்று சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்படக்கூடிய நிபந்தனைகள் எவ்வாறு பாதிப்புகளை ஏற்படுத்தப்போகிறது என்பதை மக்களுக்கு கூற இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

### மீள்விக்கப்பட்ட வழமைநிலை

ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் முதல் ஐந்து வாரங்கள் குறித்து மக்கள் மத்தியில் நேர்மறையானதும் எதிர்மறையானதுமான பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன. போராட்ட இயக்கத்தை படைப்பலம் கொண்டு ஒடுக்கும் அவரது நடவடிக்கைகள் அவரை தேசிய அரசியலில் தாராளபோக்குடைய ஒரு மிதவாத தலைவராக நோக்கியவர்களுக்கு பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. அடிப்படையில் விக்கிரமசிங்கவின் அரசியல் எதிரிகளுக்கு எதிரானதாக அமைந்த போராட்ட இயக்கத்தை ஆதரித்தவர்களுக்கு போராட்டக்காரர்கள் மீது அவருக்கு அனுதாபம் இல்லாமல் போனதை விளங்கிக்கொள்ளமுடியாமல் இருக்கிறது. அதே போராட்டம்தான் இவர் அதிகாரத்துக்கு வருவதற்கு வழிவகுத்தது.

கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு வெளியே போராட்டக்களத்தை நள்ளிரவு படையினர் முற்றுகையிட்டு நித்திரையில் இருந்த நிராயுதபாணிகளான போராட்டக்காரர்கள் மீது கொடூரமான முறையில் நடத்திய தாக்குதல் தொடங்கி ஜனாதிபதியின் பியர் குவளையை நினைவுச்சின்னமாக எடுத்துச் சென்றவர் உட்பட சட்டத்துக்குப் புறம்பாக அற்ப செயல்களைச் செய்தவர்களை வேட்டையாடுவதுவரை அரசாங்கத்தின் அடக்குமுறை பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது. இந்த நடவடிக்கைகளை இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் நாட்டு நலனில் அக்கறை கொண்ட பிரஜைகள் மாத்திரமல்ல, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் உன்னிப்பான கவனத்தில் எடுத்திருக்கின்றன.

கடந்த மாதத்தில் ஒரு தளர்வான வழமைநிலை ஏற்படுத்தப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது. மெய்யான வழமைநிலை போன்று இது காணப்படாவிட்டாலும் மக்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள் போன்று தெரிகிறது. மின்வெட்டும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளும் சில வாரங்களாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், தொடர்ந்தும் இதே நிலை நீடிக்குமா என்ற அச்சமும் இருக்கிறதுபோன்று தெரிகிறது.

நாட்டுக்கு வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு நடத்துகின்ற பேச்சுவார்த்தைகள் எதிர்பார்க்கப்படுகின்ற நிதியுதவிகள் விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையை கொடுத்திருக்கின்றன. சிறுவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்தில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மக்களில் கணிசமான பிரிவினர் தங்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்கு பெரும் கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் உகந்த உணவை தேடமுடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதையுமே இது காட்டுகிறது. வீடுகளுக்குள் உள்ள இந்தப் பிரச்சினை புதிய போராட்டங்கள் மூலமாக இன்னும் வெளிக்காட்டப்படவில்லை. போராட்ட இயக்கம் இடதுசாரிகளாலும் தீவிரவாதிகளினாலும் கடத்திச்செல்லப்பட்டுவிட்டது என்ற வாதம் அந்த இயக்கத்தை பலவந்தமாக ஒடுக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இந்த படைப்பலப் பிரயோகமும் தவறான கற்பிதங்களும் நீண்டகால நோக்கில் பெரும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும்.

மறுபுறத்தில், ஜனாதிபதி விக்கிரமசிங்கவை நிராகரிப்பதற்கு முன்னதாக அவருக்கு கூடுதல் காலஅவகாசத்தை வழங்குவதற்கு மக்கள் தற்போது பெரும்பாலும் முன்வருகிறார்கள்போன்று தெரிகிறது. உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் விவகாரங்களை நன்கு விளங்கிக்கொண்டுள்ள அனுபவ முதிர்ச்சியுடைய அரசியல்வாதியான ஜனாதிபதி இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு முக்கியமாக தேவைப்படுகின்ற சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு பொருத்தமானவர் என்று பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தாராளவாத போக்குடைய மிதவாதியான ஜனாதிபதி இன, மத அடிப்படையில் பாரபட்சம் காட்டுகின்ற சிந்தனைப் போக்கையோ அல்லது சமூகங்களுக்கு எதிராக வன்மத்தைச் சாதிக்கின்ற சுபாவத்தையோ கொண்டிராத ஒருவர் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

ரி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க மற்றும் மைத்ரிபால சிறிசேன ஆகியோர் ஜனாதிபதிகளாக இருந்தபோது பிரதமராக பதவிவகித்த விக்கிரமசிங்க சமாதானம், நல்லிணக்கம் தொடர்பான விவகாரங்களில் கூடுதல் கரிசனை காட்டிய ஒருவராகவும் சர்வதேச மற்றும் மனித உரிமைகள் நியமங்களின் வழியில் சிவில் சமூகத்தை அனுசரிக்கும் ஒருவராகவும் நோக்கப்பட்டவர்.

### அவசரமான செயற்பாடுகள்

பொதுவில் அரசாங்கமும் குறிப்பாக, ஜனாதிபதியும் அவசரமாக மூன்று செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டிய தேவை இருக்கிறது. போராட்ட இயக்கத்துக்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும். அந்த நடவடிக்கைகளின் மட்டுமீறிய தன்மை அரசாங்கத்துக்கு நாட்டுக்குள்ளும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றது.

ஊழல் தொடர்பில் அதிகார துஷ்பிரயோகத்தைச் செய்தமைக்காக நீதிமன்றங்களினால் குற்றவாளிகளாக காணப்பட்டவர்கள் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்தச் செயலுடன் ஒப்பிடும்போது தற்போது இடம்பெறுகின்ற கைது நடவடிக்கைகளின் மட்டுமீறிய தன்மையை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த சமச்சீரற்ற அடக்குமுறைக்கான முழுப்பொறுப்பும் முற்றுமுழுதாக ஜனாதிபதி மீதே சுமத்தப்படும். ஏனென்றால், அவரே பாதுகாப்பு அமைச்சராகவும் முப்படைகளின் பிரதம தளபதியாகவும் இருப்பதுடன், தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கின்ற அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தின் கீழான சர்வ அதிகாரங்களையும் கொண்டவராகவும் இருக்கிறார். தன்னைப் பற்றி நிலவுகின்ற தப்பெண்ணத்தை அவர் நீக்கவேண்டியது முக்கியமானதாகும். அரசாங்கத்தின் குண்டர்கள் ஒருபோதும் நீதியின் முன் நிறுத்தப்படுவது சாத்தியமில்லை என்ற உண்மையை ஒத்துக்கொண்டு போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டமைக்காக கைதானவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படுவதை உறுதிசெய்வதன் மூலமாக இதை அவர் செய்யலாம்.

இரண்டாவதாக, அரசாங்கம் அதன் பொருளாதாரத் திட்டத்தைப் பற்றி பெருமளவுக்கு வெளிப்படையானதாக இருக்கவேண்டும். இதுவே பொதுமக்களைப் பொறுத்தவரை முக்கிய கரிசனைக்குரியதாக இருக்கிறது. கொழும்பில் அண்மையில் பெற்றோலுக்கும் டீசலுக்கும் ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணமாக தோன்றிய நீண்ட வரிசைகள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மக்கள் அவசரப்பட்டு எரிபொருட்களை வாங்குவதற்கு முண்டியடிப்பதற்கு வழிவகுத்தது. மின்வெட்டு நேரம் நீடிக்கப்படலாம் என்ற ஊகங்களும் அடிபடுகின்றன. 300இற்கும் அதிகமான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தற்காலிகத் தடை, சர்வதேச நாணய நிதியத்தின் நிதியைப் பெறுமுகமாக முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளுக்கான அறிகுறியாகும்.

வெளிப்படைத்தன்மை இல்லையானால், அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் தனக்கு அனுகூலமான முறையில் பொருளாதார மறுசீரமைப்பு செயன்முறையை முன்னெடுக்க கூடுதல் ஆற்றல் தனக்கு கிடைக்கும் என்று நம்புவதனாற்போலும் அரசாங்கம் பொருளாதாரத் திட்டத்தை வெளிப்படையாக முன்வைக்க விரும்பாமல் இருக்கக்கலாம். ஆனால், இது அரசாங்கம் நியாயப்பாடு இல்லாத ஒன்று என்று ஏற்கனவே உணர்கின்ற மக்கள் பிரிவினரிடமிருந்து மேலும் தனிமைப்படவே வழிவகுக்கும்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருப்பதைபோன்ற பொருளாதார நெருக்கடி பெரும்பாலான ஜனநாயக நாடுகளில் தோன்றியிருந்தால் அரசாங்கம் பதவியிலிருந்து இறங்கி புதிய தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு வழிபிறந்திருக்கும். ஆனால், ஜனாதிபதியோ அல்லது தற்போதைய அரசாங்கமோ பதவி விலகவோ அல்லது நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல்களை நடத்துவதற்கோ விருப்பத்தை வெளிக்காட்டவில்லை. 20ஆவது திருத்தத்தின்கீழ் அடுத்த வருடம் பெப்ரவரியில் மாத்திரமே நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான சட்ட அதிகாரத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க பெறுவார். அதேவேளை, அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தமுடியும்.

மாகாண சபைகளை மீண்டும் ஏற்படுத்தினால், தீர்மானங்களை எடுக்கும் பதவிகளுக்கு புதிய மக்கள் ஆணையுடன் பிரதிநிதிகளை கொண்டுவருவதன் மூலம் அரசாங்க முறைமைக்கு நியாயப்பாட்டை மீள ஏற்படுத்தமுடியும் என்பதுடன், சமூகத்தில் பதற்றத்தை தணிக்கக்கூடியதாகவும் இருக்கும். இதனால் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான போதுமான காலஅவகாசம் அரசாங்கத்துக்கு கிடைக்கக்கூடியதாகவும் இருக்கும். இலங்கை நிலைபேறான தேசிய பொருளாதார பாதையில் பயணிக்க வேண்டுமாக இருந்தால், பொதுவில் அரசாங்கமும் குறிப்பாக, ஜனாதிபதியும் (அவர் மீதே கூடுதல் நம்பிக்கை வைக்கப்படுகிறது) காலத்தின் சோதனைக்கு நின்றுபிடிக்கக்கூடிய கொள்கைகளை வகுக்கவேண்டியது அவசியமாகும்.



கலாநிதி ஜெகான் பெரேரா




# இன்றைய நாளில்...

- 1666 – இலண்டனில் மூண்ட பெருந்தீயினால் மூன்று நாட்களில் புனித பவுல் பேராலயம் உட்பட 10,000 கட்டடங்கள் அழிந்தன.
- 1806 – சுவிட்சர்லாந்தில் ஏற்பட்ட பெரும் நிலச்சரிவில் 457 பேர் உயிரிழந்தனர்.
- 1856 – சீனாவின் நாஞ்சிங்கில் சிங் ஆட்சிக்காலத்தில் தைப்பிங் கிளர்ச்சியில் ஈடுபட்ட பல முக்கிய தலைவர்கள் உட்பட 27,000 பேர் கொல்லப்பட்டனர். இக்கொலைகள் ஒக்டோபர் வரை நீடித்தன.
- 1862 – யாழ்ப்பாணத்தில் ஜவ்னா ஃபிறீமேன் என்ற ஆங்கிலப் பத்திரிகை வெளியானது.
- 1946 – பிரித்தானிய இந்தியாவில் ஜவஹர்லால் நேரு தலைமையில் பிரதமரின் அதிகாரங்களுடன் இடைக்கால அரசு உருவானது.
- 1951 – எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.
- 1960 – திபெத்திய வரலாற்றில் முதல்தடவையாக மத்திய திபெத்திய நிர்வாகத்தின் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் இடம்பெற்றது. இந்நாளை அவர்கள் ஜனநாயக நாள் எனக் கொண்டாடுகிறார்கள்.
- 1970 – சந்திரனுக்கான அப்பல்லோ 15, அப்பல்லோ 18 ஆகிய திட்டங்கள் கைவிடப்பட்டதாக நாசா அறிவித்தது.
- 1985 – தமிழ் அரசியல்வாதிகள் மு. ஆலாலசுந்தரம், வி. தர்மலிங்கம் ஆகியோர் தமிழ்க் குழுக்களினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1988 – இந்திய-இலங்கை ஒப்பந்தம், 1987: இலங்கையின் வட மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியன வடக்கு - கிழக்கு மாகாணம் என இணைக்கப்பட்டது.
- 2006 – ஈழப்போர்: யாழ்ப்பாணம் பருத்தித்துறை முனை கடற்சமரில் இலங்கைக் கடற்படையின் 2 டோரா படகுகள் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.
- 2018 – பிரேசிலின் தேசிய அருங்காட்சியகம் தீக்கிரையானது. அங்கிருந்த 90 வீத படைப்புகள் அழிந்தன.

# 2023இற்கான பாடப்புத்தகங்களை அச்சிட அரசாங்கம் நடவடிக்கை

## தேவையான காகிதாதிகள், எழுதுகருவிகள் இந்திய கடன் உதவியின்கீழ் இறக்குமதி செய்யவும் தீர்மானம்

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்திற்குத் தேவையான பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், 2023ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு 16,483 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கும், பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதற்கும், விடை எழுதுவதற்கும் தேவையான காகிதாதிகள் மற்றும் எழுதுகருவிகள் இந்திய கடன் உதவியின்கீழ் இறக்குமதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் காகித தேவைகளையும் இதனூடாக பூர்த்திசெய்ய கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. கல்வி அமைச்சின்கீழ் உள்ள அரச அச்சக கூட்டுத்தாபனத்தினால் மொத்த பாடப்புத்தகங்களில் 45 வீதத்தை அச்சிடுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதவிர, 45 சதவீதம் அச்சு நிறுவனத்துக்கும், மீதமுள்ள 55 சதவீத பாடப்புத்தகங்கள் கொள்முதல் முறையில் தெரிவுசெய்யப்பட்ட தனியார் அச்சகங்களுக்கு அவர்களின் கோரிக்கைக்கிணங்க இந்திய கடன் திட்டத்தின்கீழ், வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

கடதாசி உற்பத்தி தொடர்பில் விளக்கமளிக்கும் வகையிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று (01) கொழும்பில் இடம்பெற்றது. இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்சவின் தலைமையில் புதிய தலைவரொருவர் நியமிக்கப்பட்டு வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. அதன்பின்னர் தொழிற்சாலையின் நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பின.

தற்போதைய தலைவர் நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த கழிவு தாள்களை விற்பனை செயவதற்கான நிறுவனத்தின் நிலைமையை மீண்டும் வழமைக்குக் கொண்டுவந்துள்ளார். தற்போது நிலவும் கடதாசி இறக்குமதிக்கு ஏற்பட்ட பாரிய சிக்கல் நிலைமைகளுக்கு மத்தியில் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்படும் கடதாசிகளை பயன்படுத்தி பாடசாலை புத்தகங்களை அச்சிடக்கூடியதாகவுள்ளது.

மேலும், நீண்டநாட்களுக்கு முன்னிருந்து அரச லொத்தர் அச்சிடுவதற்காக தேசிய லொத்தர் சபையும் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் கடதாசியை பயன்படுத்தி லொத்தர் அச்சிடும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

நிதி நெருக்கடி குறிப்பாக, அந்நிய செலாவணி தொடர்பில் பிரச்சினையை சந்தித்துள்ள சந்தர்ப்பத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கு வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் தலைவர் உள்ளிட்ட பணிகுழாமுக்கு நன்றி தெரிவித்துகொள்ள விரும்புகிறோம்.

அந்நியசெலாவணியை மீதப்படுத்துவதற்காகவும், தேசிய தொழிலொன்றை மறுசீரமைக்க ஒத்துழைப்பு வழங்கியதற்காகவும் மேலும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

எதிர்காலத்தில் சிறியளவில் நடவடிக்கைகளை முன்னெடுத்து பாரியனவான முதலீட்டில் அரச மற்றும் தனியார் துறையினரின் பங்கேற்புடன் மிகவும் தரம் கொண்ட தாள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யவும் அச்சு நடவடிக்கைகளை அதிகரிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 01.09.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 130 44 0 | 142 2766 |
| கனேடியன் டொலர் | 158 8172 | 171 1514 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 7738 | 43 173 |
| யூரோ | 245 1203 | 260 4852 |
| ஜப்பான் யென் | 1 4404 | 1 5447 |
| சிங்கப்பூர் டொலர் | 142 6111 | 153 5607 |
| ஸ்ரேலிங் பவுன் | 300 7 83 | 317 600 |
| சுவிஸ் பிராங்ஸ் | 251 1335 | 268 32 5 |
| ஐ.அ.டொலர் | 246 4027 | 257 7501 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 62 0 |
| குவைட் | குவைட் தினார் | 0,060 2712 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 7432 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 854 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 460 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 2 24 |

# கண்டி மீரா மக்கம் பள்ளியில் இடம்பெற்ற இன நல்லிணக்க வேலைத்திட்டம்





(கண்டி நிருபர்)

இனங்களுக்குகிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் முஸ்லிம் பள்ளிகளை சகோதர இனங்கள் சந்தேகக்கண்கொண்டு பார்ப்பதை தவிர்த்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாக வைத்து கொழும்பில் இயங்கும் இஸ்லாமிய கற்கைகளுக்கான மத்திய நிலையம், நாட்டில் பல பாகங்களிலும் முஸ்லிம் பள்ளிகளுக்கு சகோதர இனத்தவர்களை அழைத்துச்சென்று அங்குள்ள நிலைமைகளை தெளிவுபடுத்தும் செயற்றிட்டம் ஒன்றை நடை முறைப்படுத்தி வருகிறது. அதில் ஒரு வேலைத்திட்டமாக ''கண்டி மீரா மக்கம் பள்ளியில் ஒழுங்குசெய்யப்பட்ட எமது பள்ளிக்கு விஜயம் செய்யுங்கள்" என்ற வேலைத்திட்டம் நேற்று (01) இடம்பெற்றது.

கண்டியிலுள்ள பிரபல பாடசாலைகள் மற்றும் தமிழ், சிங்கள மற்றும் பல்வேறு இனக்குழுக்களைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் அரச அதிகாரிகள் பிரதம தலைவர்கள், பெண்கள் என பலர் இதில் கலந்து விளக்கங்களைப்பெற்றனர்.

மௌலவி மொகமட் நிஸ்வான் மற்றும் மூனீர் ஹஸன் உட்பட உலமாக்கள் இதில் கலந்து விளக்கமளித்தனர்.

# மக்கள் கேள்விகளுக்கு ட்விட்டர் ஸ்பேஸ் ஊடாக பதிலளிக்கவுள்ள கோபா குழுத் தலைவர் ஹர்ஷ



அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷ த சில்வா கலந்துகொள்ளும் நேரடிக் கலந்துரையாடல் இன்று (02) முற்பகல் 10.30 மணிமுதல் 11.30 மணிவரை நாடாளுமன்ற உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கின் (@ParliamentLK) ஊடாக நடைபெறவுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான பொதுமக்களின் கேள்விகளை #LKaskMP ஊடாக முன்வைக்க முடியும் என்பதுடன், அன்றைய தினம் நேரடியாக இணைந்துகொண்டும் கேள்விகளை முன்வைக்க முடியும்.

பொதுமக்கள் மைய நாடாளுமன்றத்திற்காக மக்கள் பிரதிநிதிகளையும் பொதுமக்களையும் நேரடியாக தொடர்புபடுத்தும் வகையில் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் இந்த நேரடி டுவிட்டர் கலந்துரையாடல் தொடரை ஏற்பாடு செய்து வருகின்றது.

# எகிப்து தூதுவர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரை சந்திப்பு



இலங்கைக்கான எகிப்து தூதுவர் மகேத் மொஸ்லே மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (31) அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது பன்முக இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இருவரும் விரிவாக கலந்துரையாடியுள்ளதுடன், தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள், சந்தித்துள்ள சவால்கள் மற்றும் அந்த சவால்களை எதிர்கொள்ள அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி எகிப்து தூதுவருக்கு விளக்க மளித்துள்ளார்.

தற்போதைய உலக அபிவிருத்திகள் மற்றும் அவை எவ்வாறு இருநாடுகளிலும் தாக்கம் செலுத்தும் என்பது தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர். இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கான 65ஆவது ஆண்டு விழாவை அடுத்தவருடம் கொண்டாடுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.




**கொழும்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும், கொழும்பு மாநகர சபையும் இணைந்து வறுமைக்கோட்டுக்குக்கீழ் இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு கொழும்பு மாநகர உறுப்பினர்கள் எம்.சுதர்சன், ஓசித்த ரட்டவீர ஆகியோரால் 3500 ரூபா பெறுமதியான சதொச வவுச்சர் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு கெத்தாராம விகாரையில் இடம்பெற்றதுடன், கொழும்பு பிரதேச இளைஞர் கழகத்தின் தலைவரும், சம்மேளனத்தின் தலைவருமான அம்துல் ரஹ்மான், செயலாளர் கே.சாம் ஆகியோர் கலந்துகொண்டனர்.**

(படங்கள் எம்.நசார்)

# இங்கிரிய ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலய கும்பாபிஷேக பெருவிழா





இங்கிரிய, றைகம் கீழ்ப்பிரிவில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா நேற்று முன்தினம் (31) காலை 9.10 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேக பெருவிழாவின் பிரதம குரு சர்வாலய கிரியாமணி, கிரியா ஜோதி, கிரியா குக சாகரம் சிவஸ்ரீ கணேச பரமசிவன் குருக்கள் மற்றும் பத்ரகாளி அம்மன் ஆலயத்தின் ஆதின குரு திலகராஜா உள்ளிட்டோரின் தலைமை ஒருங்கமைப்பில் நடைபெற்ற இந்த பெரு நிகழ்வில் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தார்கள்.

**தகவல்: மணி ஸ்ரீகாந்தன்**

# உயர்தரப் பரீட்சை சித்தி




## பாரதி மகா வித்தியாலயம்

(தலவாக்கலை நிருபர்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய தலவாக்கலை பாரதி மகா வித்தியாலயத்தில் கலை மற்றும் வர்த்தக பிரிவில் மாணவர்கள சிறந்த சித்திகளை பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்கள்.

அதற்கமைய பாடசாலையில் கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகளில் இரண்டு மாணவர்கள் 3 ஏ சித்தியை பெற்றுள்ளனர்.

கலைப் பிரிவில் சத்தியவாணன் பபித்ரா 3 ஏ சித்திகளையும், வர்த்தகப் பிரிவில் ஜூட் வினோதினி 3 ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர். வர்த்தக மற்றும் கலைப் பிரிவுகளிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்தியடைந்ததுடன் முகாமைத்துவம், சட்டம் உள்ளிட்ட பல பீடங்களுக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்கும் தகுதியை பெற்றுள்ளனர்.

## சரஸ்வதி மத்திய கல்லூரி

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளினடிப்படையில் ப/சரஸ்வதி மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகள் உள்ளடங்கலாக அனைத்துப் பிரிவுகளிலும் சிறந்த பெறுபேற்றைப் பெற்று மாவட்டத்தில் சிறந்தோர் பாடசாலையாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. பதுளை சரஸ்வதி மத்திய தேசியக் கல்லூரியில் 94 மாணவர்கள் க.பொ.த. உயர்தரத்தில் தோற்றி, 49 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர்.

டீ. கபிலக்ஷன் மற்றும் எஸ்.கிருபாகரன் ஆகிய இருவரும் கணிதப் பிரிவில் ஏ, 2 - பி சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் முறையே 86ஆம் மற்றும் 110ஆம் இடங்களையும் தமிழ் மொழிமூல மாணவர்களில் மாவட்டத்தில் முதலிரண்டு இடங்களைப் பெற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இவர்கள் உள்ளடங்கலாக மேலும் இருவர் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் பல்கலைக்கழக தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

விஞ்ஞானப் பிரிவில் ஜி. சதேஷ் மற்றும் ஷெரோன் அனிடா ஆகிய இருவரும் 2 – சி, எஸ் சித்திகளைப் பெற்றுள்ளதுடன், மூவர் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பல்கலைக்கழக தகைமை பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் எஸ். மிருதுகேஷ் 3 - ஏ சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் 149ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு 11 மாணவர்கள் வர்த்தகப் பிரிவில் பல்கலைக்கழக தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

உயிர்முறைத் தொழில்நுட்பப் பிரிவில் செல்வன் ஜே.எஸ்.எம்.நபீல் 3 - பி சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் 29ஆம் இடத்தையும் பதுளை வலய தமிழ் மொழிமூல மாணவர்களில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளதோடு மேலும் 5 மாணவர்கள் உயிர்முறைத் தொழில்நுட்பப் பிரிவில் பல்கலைக்கழக தகைமைகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இது தவிர, கலைப்பிரிவில் 17 மாணவர்களும் இயந்திரவியல் தொழில்நுட்பப் பிரிவில் 8 மாணவர்களும் பல்கலைக்கழக தகைமையைப் பெற்றுள்ளனர். இவ்வாண்டு கிடைக்கப் பெற்ற பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரியின் உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் 49 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளுடன் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெற்றுக்கொண்டு பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

# நிந்தவூர் பிரதேச கடலரிப்பை தடுப்பதற்கு ஒரு மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் தடுப்புவேலி

## பிரதேச சபையால் அதற்கான பணிகள் ஆரம்பம்

(நூருள் ஹுதா உமர்)

நிந்தவூர் பிரதேச சபையின் 53ஆவது சபை அமர்வு நேற்று முன்தினம் (31) நிந்தவூர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் எம்.ஏ.எம்.அஸ்ரப் தாஹிர் தலைமையில் இடம்பெற்றது.



இதன்போது சபையில் கலந்துகொண்டிருந்த உறுப்பினர்கள் கடலரிப்பினை தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் குறித்தும் கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

இதற்கு விளக்கமளித்த தவிசாளர்,

குறித்த கடலரிப்பை தடுப்பதற்காக கட்சி பேதங்களுக்கப்பால் அனைவரும் முயற்சித்து வருகின்றனர். அந்தவகையில் முதற்கட்ட நடவடிக்கையாக ஒலுவில் துறைமுக வளாகத்திலுள்ள பாராங்கற்களை விடுவித்து அக்கற்களைக்கொண்டு தடுப்புவேலி அமைப்பதற்கான வேலைத்திட்டம் நிந்தவூர் பிரதேச சபையின் ஒரு மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினரால் ஏலவே அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரினால் அவசரமாக வழங்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா உள்ளடங்களாக இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கான வேலைத்திட்டங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையெனவும் அறிய முடிகிறது.

மேலும் நிந்தவூர் பிரதேச சபையில் மூன்று பிரதான கட்சிகளையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உறுப்பினர்கள் தங்கள் கட்சித் தலைமைகள், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அதிகாரிகளின் கவனத்திற்கு இவ்விடயங்களை கொண்டுசேர்த்து ஊரையும் ஊர் மக்களையும் பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுக்குமாறும் தவிசாளர் தாஹிர் வலியுறுத்தியிருந்தார்.

இதன்போது கட்சி பேதங்களின்றி மக்கள் சேவையாற்ற தங்களாலும் தங்கள் கட்சி தலைமைகளாலும் முடியுமான விடயங்களை துணிந்து செய்து வருவதாகவும் உறுப்பினர்கள் சபையில் உறுதியளித்திருந்தனர் - என்றார்.

# திருக்கோவிலில் கஞ்சாவுடன் இருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவில் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருக்கோவில் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசங்களுக்குச் சென்ற பொலிஸார் சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

திருக்கோவில் வாக்கிறீஸா வீதியில் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 800 மில்லிகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது, இதேவேளை, மற்றைய நபரை பாடசாலை வீதி விநாயகபுரத்தில் கைதுசெய்துள்ளதுடன், 780 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை நேற்று முன்தினம் (31) அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது எதிர் வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சௌபாக்கிய சமுர்த்தி வீடமைப்புத் திட்டத்தில் இறக்காமத்தில் பயனாளி ஒருவருக்கு வீடு



(திராய்க்கேணி நிருபர்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் உருவான சௌபாக்கிய வேலைத்திட்டத்தின்கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன.

இத்தொடரில் சமுர்த்தி சௌபாக்கிய "உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" எனும் வேலைத்திட்டத்தின்கீழ் இறக்காமம் 05ஆம் கிராமசேவகர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் புதிய வீடு நிர்மாணத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம்.தஸ்லீம் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் அஷ்ஷேய்க் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் (நளீமி) கலந்து சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் டீ.கே.றஹ்மதுல்லாஹ், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் ஏ.எல்.ஜெமீல், குறித்த கிராமசேவகர் பிரிவுக்குப் பொறுப்பான சமுர்த்தி உத்தியோகத்தர் ஏ.எல்.பஸீர் உட்பட கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

வீடற்ற குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுப்பதனூடாக எல்லோரது வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் சௌபாக்கிய வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக வழங்கப்பட்ட நிதிப்பங்களிப்பு, பிரதேச தனவந்தர்களின் நிதி மற்றும் பொருள் பங்களிப்புடன் இவ்வீடுகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

# பட்ஜெட்டில் அரச ஊழியர்கள், ஓய்வூதியருக்கு அநீதி; எதிர்பார்ப்புடன் இருந்தோருக்கு பெரும் ஏமாற்றம்

## தென்கிழக்கு கல்விப் பேரவை கவலை

(சாய்ந்தமருது நிருபர்)

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால பட்ஜெட்டில் அரச சேவை ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக தென்கிழக்கு கல்விப் பேரவை கவலை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அப்பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் அரச சேவை ஊழியர்களின் சம்பளமோ ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவோ சற்றும் அதிகரிக்கப்படாமல் கைவிடப்பட் டமை பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக அரச சேவை ஊழியர்களும் ஓய்வூதியர்களும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் திண்டாடி வருகின்றனர். இந்நிலையில், குறித்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இதன்மூலம் இவர்கள் அரசாங்கத்தினால் கணக்கில் எடுக்கப்படாமல் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த இக்கட்டான சூழ்நிலையில் இவர்கள் அரசாங்கத்தினால் கைவிடப்பட்டிருப்பதானது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் தொடர் போராட்டம் காரணமாக அவர்களது சம்பளத்தை அதிகரிப்பதற்கு கடந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட் டிருக்கிறது. அப்போதுகூட அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் கவனத்திற்கொள்ளப்படவில்லை.

இதைவிட தற்போது அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மூன்று, நான்கு மடங்காக அதிகரித்துள்ள சூழ்நிலையில் இவர்களுக்கு ஒரு சதம் கூட சம்பள அதிகரிப்போ விசேட கொடுப்பனவோ வழங்க எந்த முன்மொழிவும் மேற்கொள்ளப் படவில்லை. அரச சேவை ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் வாழ்க்கைச் சுமைக்கு ஓரளவாவது ஆறுதலளிக்கும் வகையில் இந்த பட்ஜெட்டில் சிறுதொகை அதிகரிப்பைக்கூட வழங்க அரசாங்கம் முன்வராதிருப்பதையிட்டு எமது அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நிலையில், இத்தவறை நிவர்த்திசெய்யும் பொருட்டு இவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கும் வகையிலான திட்டமொன்றை விசேடமாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும் - என்றுள்ளது.

---

# வைரக்கற்கள் பதித்த காலணியுடன் ஆடிய செரீனா




கடந்த திங்கட்கிழமைமுதல் அமெரிக்காவில் நடைபெற்றுவரும் அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் வைரக்கற்கள் பதித்த காலணியை அணிந்து விளையாடியுள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த செரீனா வில்லியம்ஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். மகளிர் இரட்டையர் பிரிவில் 14 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். டென்னிஸ் உலகை தங்கள் சாதனைகளால் ஆட்சிசெய்த வில்லியம்ஸ் சகோதரிகளில் இளையவர் இவர்.

நடப்பு அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்றுப் போட்டியில் டேங்கா கோவினிக்கை எதிர்த்து அவர் விளையாடினார். 6-3, 6-3 என நேர் செட் கணக்கில் இந்தப் போட்டியில் செரீனா வெற்றிபெற்றார். இந்த வெற்றியின் மூலம் அவர் தனது ரசிகர்களை கவர்ந்திருந்தார். இந்தப் போட்டியில் அவர் அணிந்து விளையாடிய ஆடை மற்றும் காலணியும் ரசிகர்களின் கவனத்தை பெற்றது.

இந்தத் தொடருக்காக பிரத்தியேகமாக வைரக்கற்கள் பதித்த கறுப்பு நிற காலணியை அவர் அணிந்திருந்தார். இந்தக் காலணியை நைக் நிறுவனத்துடன் இணைந்து அவர் வடிவமைத்துள்ளார். அதில் லேஸ் கட்டும் பகுதியில் மமா மற்றும் குயீன் என பிரத்தியேகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்றைய போட்டி




ஷார்ஜா - இரவு 7.30

# இஸிப்பத்தான - சென். தோமஸ் கல்லூரிகள் முதல் அரையிறுதியில் இன்று பலப்பரீட்சை




பாடசாலை ரக்பி லீக் - 2022 தொடரின் முதல் அரையிறுதி ஆட்டம் இன்று மாலை 4.15 மணிக்கு கொழும்பு ஹெவ்லொக் பார்க் மைதானத்தில் நடைபெறுகிறது. குறித்த அரையிறுதி ஆட்டத்தில் இஸிப்பத்தான கல்லூரியும் சென். தோமஸ் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

கடந்த சனிக்கிழமை கொழும்பு ரோயல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதல் காலிறுதி ஆட்டத்தில் தர்மராஜ கல்லூரியை எதிர்த்து ஆடிய இஸிப்பத்தான கல்லூரி 38 – 06 என்ற புள்ளிகள் கணக்கில் இலகுவான வெற்றி ஒன்றை பதிவுசெய்து அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றது.

மறுமுனையில் கடந்த சனிக்கிழமை ஹெவ்லொக் பார்க் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் வித்யார்த்த கல்லூரியை எதிர்த்து ஆடிய சென். தோமல் கல்லூரி 35 – 14 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றது. அந்தவகையில் இரு பலம்பொருந்திய அணிகள் முதல் அரையிறுதி ஆட்டத்தில் பலப்பரீட்சை நடத்துவதால் இன்றைய போட்டி மிகுந்த எதிர்பார்ப்புமிக்க போட்டியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

Dialog SCHOOLS RUGBY KNOCKOUTS

# ஆறு ஆண்டுகளின் பின் பந்துவீசிய கோஹ்லி

ஆவது ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் முதல் அணியாக ஆப்கானிஸ்தான் சுப்பர்-4 சுற்றுக்கு தகுதிபெற்ற நிலையில், நேற்று முன்தினம் ஹொங்கொங் அணிக்கு எதிரான போட்டியில் 40 ஓட்டங்களினால் வெற்றிபெற்ற இந்திய அணி இரண்டாவது அணியாக சுப்பர்-4 சுற்றுக்கு தகுதிபெற்றது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான விராட் கோஹ்லி பந்துவீசியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.




துடுப்பாட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்தும் கோஹ்லி, பந்துவீசுவது அரிதான ஒன்று. போட்டியில் இந்திய அணி வெற்றிபெறுவது பெரும்பாலும் உறுதியான நிலையில், போட்டியின் 17ஆவது ஓவரை விராட் கோஹ்லி வீசினார். 2016ஆம் ஆண்டு இறுதியாக பந்துவீசியதன் பின்னர் 6 ஆண்டுகளுக்குப் பிறகு பந்துவீசி ஒரு ஓவரில் 6 ஓட்டங்களை வழங்கினார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# 23 வயதுக்குட்பட்ட ஆடவர் பிரிவில் செனால் முதலிடம்

நெஸ்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை சைக்கிள் ஓட்டுதல் கூட்டமைப்பு இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்த நெஸ்டமோல்ட் சைக்கிளிங் செலஞ்ச் - 2022 சைக்கிள் ஓட்டுதல் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் வெற்றிகரமான முறையில் நடைபெற்றது.




இதில் 38 கிலோமீற்றர் தூரம் கொண்ட 23 வயதுக்குட்பட்ட ஆடவர் பிரிவில் இலங்கை துறைமுக அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய எச்.கே.என் செனால் சமோத் டி சில்வா 56.12 நிமிடத்தில் பந்தய தூரத்தை கடந்து முதலிடத்தைக் கைப்பற்றினார். சாரங்க பெரேரா இரண்டாம் இடத்தையும், கே.டி.கொஸ்கொடகே மூன்றாமிடத்தையும் கைப்பற்றினர். மொத்தமாக ஏழு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

MINISTRY OF YOUTH & SPORTS
NestOmalt CYCLING CHALLENGE 2022
CYCLING FEDERATION OF SRI LANKA

# வாகரை களப்பு பகுதிகளில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள இறால் பண்ணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்









(வாழைச்சேனை நிருபர்)

வாகரை பிரதேசத்தின் களப்புப் பகுதிகளில் அமைக்கத் திட்டமிடப்படும் இறால் பண்ணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் பிரதேச மக்கள் வாகரை திருமலை வீதியில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஒன்றுகூடி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி இது போன்றதொரு ஆர்ப்பாட்டத்தை பிரதேச மக்கள் மேற்கொண்டிருந்தனர். அதனையடுத்து பிரதேசத்தில் இறால் வளர்ப்புத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதி நில அளவை செய்யப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் நில அளவை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மக்கள் குழப்பநிலை அடைந்துள்ளனர். இதனைத் தொடர்ந்தே வேலைத் திட்டத்தை தடுத்துநிறுத்துமாறு தெரிவித்து மீண்டும் இக்கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வாகரை பிரதேச மக்கள் மற்றும் சிவில் அமைப்புகளினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் தட்டுமுனை, புளியங்கண்டலடி, அம்பந்தனாவெளி, பால்சேனை, கதிரவெளி, கட்டுமுறிவு போன்ற இடங்களிலுள்ள மக்கள் கலந்துகொண்டு குறித்த திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அடிக்காதே அடிக்காதே ஏழையின் வயிற்றில் அடிக்காதே, எங்கள் மக்களின் விவசாய நிலத்தைப் பறிக்காதே, கால்நடைக்கான மேய்ச்சல்தரையை அழிக்காதே, அழிக்காதே எமது வளத்தினை அழிக்காதே போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தங்களது கோரிக்கை பற்றிய விடயங்களை அரசின் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டுவரும் வகையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக சம்பவ இடத்திற்கு வருகை தந்த மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் கே.லிங்கராசா மற்றும் வாகரை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் பிரணவன் ஆகியோரிடம் கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்து தீர்வொன்றைப் பெற்றுத்தருவதாக தெரிவித்தார். உதவிப் பிரதேச செயலாளர் குறித்த விடயம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைக்காக பிரதேச செயலாளரின் கவனத்திற்கு தெரிவிப்பதாக பதில் வழங்கினார். வழங்கப்பட்ட பதில்கள் ஆரோக்கியமானதாக இல்லை என்ற காரணத்தினால் அவ்விடத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

நீண்டகால பிரச்சினையான இவ்விடயத்திற்கு தீர்வு பெற்றுத் தருவதில் மாவட்டத்தின் மக்களின் பிரதிநிதிகள் பாராமுகமாகவுள்ளதாகவும் எந்தவொரு அரசியல் கட்சியையும் நம்பக்கூடாது என்றும் வாகரை மக்களை அநாதைகளாக்கியுள்ளதாகவும் அவர்களுக்கு சரியான பாடத்தைக் கற்பிக்கவேண்டும் என்பதே எமது முதல் நோக்கமாக இருக்கவேண்டும் என்றும் அனைவரும் ஒன்றுபட்டு தமது உரிமையை வென்றெடுக்க ஒன்றுபடவேண்டும், இதுபோன்ற நடவடிக்கைகள் இனிமேலும் இடம்பெறாது இருக்க, அரச திணைக்களங்கள் செயற்படவேண்டும் என்று தெரிவித்து, இவ்விடயத்தை நீதிமன்ற நடவடிக்கைக்காக செயற்படப்போவதாக தெரிவித்து எல்லோரும் கலைந்துசென்றனர். கலவரம் இடம்பெறாது தடுக்க பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அரபாநகர், ஹிஜ்ராநகர் கிராமங்களுக்கு குடிநீர்க் குழாய் வழங்க நடவடிக்கை



(மட்டக்களப்பு நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பல கிராமங்கள் வரட்சி, வரட்சியல்லாத காலங்களிலும் பாரிய குடிநீர்ப் பிரச்சினையினை எதிர்கொண்டு வருகின்றன.

இக்குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கடந்த காலங்களில் நாம் தண்ணீர் பௌசர்கள் மூலம் குடிநீர் வழங்கி வந்தபோதிலும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் விலையேற்றம், எரிபொருள் தட்டுப்பாடு என்பவைகளால் இவ்வரட்சி காலங்களில் குடிநீர் விநியோகங்களை மேற்கொள்வதில் பாரிய சவால்களை எமது பிரதேச சபை எதிர்கொண்டு வருகின்றது. இருந்தபோதிலும் பொருத்தமான பொறிமுறைகளை கையாண்டு தண்ணீர் பௌசர்கள் மூலம் குடிநீர் வழங்கும் நடவடிக்கைகளை எமது சபை தற்போது ஆரம்பித்துள்ளது.

தியாவட்டவான் தொடக்கம் நாவலடி வரையிலான கிராமங்களுக்கு குறிப்பாக தியாவட்டவான், பாலைநகர், அரபாநகர், ஹிஜ்ராநகர், நாவலடிச் சந்தி, காகிதநகர் போன்ற கிராமங்களுக்கு நிரந்தரமாக குடிநீர்த் திட்டத்தை



நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக தேசிய நீர்வழங்கல் வடிகலமைப்புச் சபையுடன் இணைந்து எமது பிரதேச சபை குடிநீர்க் குழாய்களை பதிக்கும் வேலைகளை கட்டம் கட்டமாக மேற்கொண்டு வருகின்றது.

காகிதநகர் மற்றும் தியாவட்டவான் தொடக்கம் நாவலடி சந்திவரை பிரதான வீதியில் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளதுடன், பாலைநகர் கிராமத்திற்கான குழாய்கள் தற்போது பதிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சில வாரங்களில் அரபாநகர், ஹிஜ்ராநகர், தியாவட்டவான் போன்ற பகுதிகளுக்கு குழாய்களை பதிப்பதற்கான வேலைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம் என அரபாநகர் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் தவிசாளர் ஏ.எம்.நௌபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மட்டு. வவுணதீவில் சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரம் இல்லாமலும் அனுமதிப்பத்திரம் இருந்தும் சட்ட விதிமுறைகளை மீறியும் மண் அகழ்வில் ஈடுபட்ட மூன்று வாகனங்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த அப்புஹாமியின் ஆலோசனைக்கமைய கடந்த செவ்வாய்க்கிழமை (30) பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது இவர்களை கைதுசெய்துள்ளனர்.

வவுணதீவு பிரதேசத்திலுள்ள புதுமண்டபத்தடி பிரதேசத்திலும் தாண்டியடி பிரதேசத்திலும் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களையும் குறித்த வாகனங்களையும் மூன்று சந்தேகநபர்களையும் நேற்று முன்தினம் (31) நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# திருகோணமலை கல்வி வலயத்தில் அகில இலங்கை தமிழ் மொழித் தின விழா

(நிலாவெளி நிருபர்)



திருகோணமலை கல்வி வலயத்தின் 2022ஆம் ஆண்டிற்கான அகில இலங்கை தமிழ் மொழித் தினவிழா தி/தி/பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

தி/தி/பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் தலைமையில் திருகோணமலை கல்வி வலய 2022ஆம் வருடத்திற்கான அகில இலங்கை தமிழ் மொழித் தினவிழா கடந்த செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்றது.

இரு கட்டங்களாக நடைபெற்ற குறித்த நிகழ்வின் ஆரம்ப கட்டமாக வலய மட்டத்தால் நடத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன், அதனைத் தொடர்ந்து ஏனைய கலை, கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

ஈழத்துப் பிரபல தமிழ்ப் பேச்சாளர் திருமதி திலகவதி ஹரிதாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட குறித்த நிகழ்வின் இரண்டாம் கட்டமாக நடைபெற்ற கலை, கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்விற்கு அலுவலக பிரதி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் வலயத்தின்கீழ் மூன்று கல்விக் கோட்டங்களிலும் உள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒலுவில் அல்-ஹம்றா பாடசாலையில் 36 பேர் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு

(ஒலுவில் நிருபர்)

ஒலுவில் அல்-ஹம்றா தேசிய பாடசாலையின் 2021 உயர்தரப் பரீட்சை முடிவு சிறந்த நிலையில் காணப்படுகிறது. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 62 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், 36 மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவுக்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

அந்தவகையில் மருத்துவத்துறைக்கு ஒரு மாணவரும், பொறியியல் துறைக்கு 02 மாணவர்களும், உயிரியல் மற்றும் பௌதீகவியல் துறைக்கு (BSc) 23 மாணவர்களும், கலைப்பிரிவிற்கு 08 மாணவர்களும், வர்த்தகப்பிரிவிற்கு 02 மாணவர்களும் தெரிவாகியுள்ளனர்.

பலதரப்பட்ட சவால்கள் நாட்டின் நெருக்கடிகளுக்கு மத்தியில் பரீட்சை எழுதி சித்தியடைந்த மாணவர்கள் அதற்கு உதவிய பெற்றோர்கள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகம் என அனைவருக்கும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.


திகதி 31.08.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4864
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,580,090.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 4 2 5 1 6 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.45,116,166.60

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3106
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,936,300.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 13 20 46 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.73,466,482.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1319
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,843,040.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 2 9 2 6 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,268,047.60


தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 894
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,168,780.00
வெற்றி இலக்கினம் W வெற்றி இலக்கங்கள் 10 25 69 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 123,582,059.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 173
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.6,421,460.00
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 02 17 25 53
விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.4,403,015.60

26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1212
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,637,260.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.268,133,358.00
T 20 02 28 38 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk


## போடியார் புலம்பல்!



ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக உள்ள நெருக்கடிகளுக்கு தாம் நாட்டுக்கு சார்பாக செயல்படப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சொல்லிப்போட்டாரு எலுவா.?

அவரே உதவாக்கரை எதிர்க்கட்சித் தலைவர். திடமான முடிவுகள எடுக்கமுடியாமல் திண்டாடக்குள இனி ஜெனீவாவில இலங்கையை காப்பாற்ற போறாராம். அடே தம்பி முதலில மனித உரிமை, இனப்படுகொலை, பயங்கரவாதத் தடைச்சட்டம் இதுகளுக்கு ஒண்ட கருத்த கூசாம சொல்லுடா பாப்பம்! மறுகா நாட்டப்பற்றி கத..

# கல்முனையின் சட்டம், ஒழுங்கு, போதையொழிப்பு, நிர்வாக சீரமைப்பு தொடர்பிலான கலந்துரையாடல்



(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை தொகுதிக்குட்பட்ட சட்டம், ஒழுங்கு விடயம் சம்பந்தமாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று கல்முனை மாநகர முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இங்கு கல்முனை பிராந்திய கரையோரப் பிரதேசங்களில் சட்டவிரோதமாக இடம்பெறும் காணி அபகரிப்புகள், அனுமதிகளின்றி சட்டவிரோதமாக கடற்கரை ஓரங்களில் கடை அமைத்தல் போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப் பட்டது.

கல்முனை பிரதேசத்தில் சமீபத்தைய நாட்களில் தலைதூக்கியுள்ள போதைவஸ்து பாவனையை இல்லாதொழிக்க விற்பனையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் எதிராக எவ்வித பாரபட்சமுமின்றி கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

மேலும் அரச அலுவலகங்களில் இலஞ்சம் பெற்று கடமையாற்றுவதை தடுக்கும் நோக்கில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் அடிப்படையில் இலஞ்ச ஊழலுக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இந்த விடயங்களால் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் துரிதகதியில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.அஸ்மி, கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.றம்ஸீன் பக்கீர், கல்முனை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எம்.எல்.றபீக், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம்.ரோஷன் அக்தர், சட்டத்தரணி ஆரிகா காரியப்பர், எம்.எஸ்.எம்.சத்தார், எம்.எம்.உமர் அலி, எம்.எஸ்.எஸ்.நவாஸ், எப்.நஸ்ரின், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளிருந்து விடுவிக்கப்பட்ட வயாவிளான் தெற்கு ஞானவைரவர் மகா கும்பாபிஷேகம்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

இராணுவ நடவடிக்கை காரணமாக அப்பகுதியிலிருந்த மக்கள் வெளியேறிய நிலையில், இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் 28 வருட காலமாக இருந்த கோயிலை விடுக்குமாறு பல தரப்பினரிடமும் ஆலய பக்தர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில், கடந்த 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி ஆலயப் பகுதியை இராணுவத்தினர் விடுவித்து தமது உயர்பாதுகாப்பு வலய வேலியை பின்நகர்த்தினார்.

அதனையடுத்து முற்றாக சேதமடைந்த ஆலயத்தை மீள் நிர்மாணம் செய்வதற்கு ஆலய பரிபாலனத்தினர் முயற்சிகளை முன்னெடுத்து, உள்ளூர் மற்றும் புலம்பெயர்ந்தோர்களின் நிதிப் பங்களிப்பு ஆதரவுடன் ஆலயத்தை இராஜகோபுரத்துடன் புனர்நிர்மாணம் செய்தனர்.

இந்நிலையில், நேற்று வியாழக்கிழமை காலை 7.09 மணிமுதல் 09.04 மணிவரையிலான கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தின்போது கடும் மழை பொழிந்தபோதிலும் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டு வைரவப் பெருமானை வணங்கி அருளாசியைப் பெற்றுக்கொண்டனர்.

# அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டுமென்றால் அது சீனாவின் முதலீடாக இருக்கக்கூடாது

## செல்வம் எம்.பி. கருத்து



வடக்கிலே சீனாவின் ஆதிக்கம் என்பதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக சீனாவின் கப்பல் ஒரு சர்ச்சையாக இலங்கையில் பேசப்பட்டது. இந்தியாவிற்கு பாதுகாப்பு விளைவிக்கின்ற எச்சரிக்கையை மீறி அரசாங்கம் சீனக் கப்பலை உள்ளே அனுமதித்தது. தற்போது மீண்டும் சீனாவின் ஆதிக்கம் தொடர்வதாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

அந்தவகையில் வடக்கில் சீனாவின் பிரதிநிதிகள், அவர்களுடைய முகவர்கள் வடக்கிலே கூடுதலாக களமிறக்கப்பட்டிருக்கிறார்கள். அட்டைப் பண்ணை, இறால் பண்ணை இவ்வாறு அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களை அதற்குள்ளே சிக்க வைத்து இந்தியாவிற்கு எதிரானவர்களாக கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற ஒரு சந்தர்ப்பத்தை சீனா செய்கின்றது என்பதனை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆகவே, அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அயல்நாடான இந்தியாவின் பாதுகாப்பை தமிழர்கள் பாதுகாக்க வேண்டும் என்பது எங்களுடைய கடமையாக இருக்கின்றது. ஏனென்றால், கரையோரப் பகுதியில் இருப்பது தமிழர்களே.

சீனாவின் ஆதிக்கம் வடக்கில் – குறிப்பாக, கரையோரப் பிரதேசங்களில் அவர்களுடையகால் பதிப்பு என்பதனை அனுமதிக்க முடியாது. அபிவிருத்தி என்பதனை மேற்கொள்ள வேண்டும் என்றால் அது சீனாவின் முதலீட்டாக இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து .

ஏனைய நாடுகள், ஏன் அயல் நாடான இந்தியாவில் கூட அபிவிருத்திப் பணியில் பண்ணைகளை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளை செய்யலாம். எங்களை பொறுத்தமட்டில் வடக்கில் சீனாவின் ஆதிக்கம் என்பதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது இந்தியாவின் பாதுகாப்பை தமிழர்கள் இன்றும் பாதுகாத்துக்கொண்டிருக்கின்ற சூழலில் அதனை சிதைக்கின்ற வாய்ப்பாக கடலோரப் பகுதிகளில் சீனாவின் முதலீடுகள் வருவது கண்டிக்கத்தக்கது. அதனை அனுமதிக்க முடியாது – என்றார்.

## பொன்னாலை - பருத்தித்துறை வீதி முற்றாக திறப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், கீரிமலை ஊடான பொன்னாலை - பருத்தித்துறை வீதியை மக்கள் பாவனைக்காக முற்றாக திறந்துவிட நடவடிக்கை எடுத்துள்ளோம் - வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் குறித்த வீதி காணப்பட்ட நிலையில் கடந்த நல்லாட்சி கால பகுதியில் அப்பகுதி மக்கள் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டு வீதியும் திறந்து விடப்பட்டது.

ஆனாலும் அதிகாலை 4 மணிமுதல் இரவு 10 மணிவரை யிலேயே மக்கள் குறித்த வீதியின் ஊடாக போக்குவரத்து செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதித்திருந்தனர்.

இரவு 10 மணிமுதல் அதிகாலை 4 மணி வரையில் மயிலிட்டி பகுதியிலுள்ள இராணுவ பொலிஸ் காவலரணின் வீதி தடை போடப்பட்டு மக்கள் போக்குவரத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கும்.

இந்த வீதியை முழுமையாக மக்கள் பாவனைக்காக திறந்துவிடுமாறு நீண்டகாலமாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துவரும் நிலையில் குறித்த வீதி செப்டெம்பர் முதலாம் திகதிமுதல் 24 மணிநேரமும் திறந்திருக்கும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாவட்ட செயலக மாதாந்த கலந்துரையாடல்: சிறந்த உத்தியோகத்தருக்கான சான்றிதழ் வழங்கிவைப்பு





யாழ்.மாவட்ட செயலக மாதாந்த கலந்துரையாடல் மற்றும் சிறந்த உத்தியோகத்தருக்கான சான்றிதழ் வழங்குதல் நிகழ்வும் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் (31) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கொவிட்-19 மற்றும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு, கொவிட்-19 விடுமுறையை சுற்றறிக்கைக்கமைய நடைமுறைப்படுத்தல், மரநடுகைத் திட்டம், ஆளணியை சீர்படுத்தல், அலுவலக வளங்களை சிக்கனமாக பயன்படுத்தல், அரச நிறுவனங்களுக்கு கிடைக்கும் மின்னஞ்சல், தொலைபேசி அழைப்பு களுக்கு சுற்றறிக்கைக்கமைய உடனடியாக பதிலளித்தல், 60 வயதுக்கு உட்பட்ட அரச ஊழியர்களுக்கு ஓய்வு வழங்கல், செலவீனங்களை கட்டுப்படுத்தல், வாடிக்கையாளர் சேவை குழுக்களை நியமித்தல், நலநோன்புத் திட்டங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், மாதாந்த சிறந்த உத்தியோகத்தருக்கான சான்றிதழ் வி.அருந்தவகுமார் - மார்ச், திருமதி கே.குணதர்சனா - ஏப்ரல், திருமதி எஸ்.நிர்மலா - மே, திருமதி எஸ்.தயானி - ஜூன் ஆகியோருக்கு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனால் வழங்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் கிளைத் தலைவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கொட்டகலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று முன்தினம் (31) நடைபெற்றன. இதன்போது கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாத்தும் பூஜைகளில் கலந்துகொண்டார். (படங்கள் - தலவாக்கலை நிருபர்)

# பெருந்தோட்டப் பகுதிகளில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு

## பெரும் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளதாக மக்கள் தெரிவிப்பு

(மனூர சுதத் செல்லஹேவா)

ஹட்டனை அண்மித்த பெருந்தோட்டப்பிரதேசங்களில் நிலவும் கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட இந்த பிரதேசத்திலுள்ள அநேகமானவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சிலர், தமது பிரதான உணவு கோதுமை மாவால் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் என்றும் தற்போது வரையில் தமது பிரதேசங்களில் இருந்துவரும் கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக பல்வேறு சிக்கல் நிலைகளுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.


கோதுமை மா தட்டுப்பாட்டை பிரதான காரணமாகக்கொண்டு ஒருசில வியாபாரிகள் அதிக விலைக்கு கோதுமை மாவை விற்பனை செய்வதாகவும் அதனால் தாம் மேலும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த மேலும் சிலர், சந்தையில் கோதுமை மா தட்டுப்பாட்டின் காரணமாக ஒருசில வர்த்தகர்கள், ஹோட்டல் மற்றும் வெதுப்பக உரிமையாளர்கள் மக்களின் வயிற்றில் அடிக்க ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டனர்.

ஒருசில கடைகளில் மரக்கறி ரொட்டி, ரோல்ஸ் போன்ற உணவு வகைகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஒருசில வெதுப்பக உரிமையாளர்கள் பாண் போன்ற உணவு வகைகளின் விலையை கடுமையாக அதிகரித்துள்ளதாகவும் இந்த நிலைமையின் காரணமாக தாம் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கோதுமை மா தட்டுப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது ஹட்டன் நகர பிரதான விற்பனையாளர்கள் சிலர் கருத்து தெரிவிக்கையில், மாவுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தாலும் தாம் விலையை அதிகரிக்க வில்லை என்றும் கோதுமை மாவுக்குத் தேவையான கோதுமை விதை துருக்கியிலிருந்து கொண்டுவரப்படுவதாகவும் அங்கு தற்போது நிலவும் போர் நிலைமையின் காரணமாக இதுவரையில் முறையாக கோதுமை விதை கொண்டுவர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால் தமக்கு மாதாந்தம் கிடைக்கும் கோதுமை மாவின் அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

# லுணுகலை செபஸ்தியார் ஆலயத்தில் புனித லூர்து மாதாவின் சிலை உடைப்பு



(பசறை நிருபர்)

லுணுகலை அடாவத்தை எல்ரோடோ பிரிவில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் ஆலயத்தின் முன்றலில் அமைக்கப்பட்டிருந்த புனித லூர்து மாதாவின் சிலை இனந்தெரியாத நபர்களால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.


நேற்று முன்தினம் இரவு ஆலயத்தின் நுழைவாயில் கதவை உடைத்துக்கொண்டு உட்சென்ற நபர்கள் ஆலயத்தின் முன்றலில் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த மாதா சிலையை அகற்றி அதனை எல்டராடோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் கொண்டுசென்று நொறுக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதேச மக்கள் லுணுகலை பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து உடனடியாக ஸ்தலத்திற்கு விஜயம் செய்த பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

பதுளை குற்றவியல் பிரிவின் தடயவியல் பொலிஸாரையும் அழைத்து விசாரணைகளை மேற்கொண்டு லுணுகலை பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை எந்தவொரு சந்தேகநபரும் கைது செய்யப்படாத நிலையில் இந்து கிறிஸ்தவ மக்கள் ஒற்றுமையாக வசித்துவரும் இந்தப் பிரதேசத்தில், இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த செயற்பாடானது இரு சமூகங்களுக்கு இடையே ஒற்றுமையை சீர்குலைக்க செய்யும் முயற்சியாகவும் இருக்கலாம் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# கென்யோன் நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவுகள் திறப்பு



(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலைநாட்டில் கடந்த இரண்டு நாட்களாக கன மழை பெய்து வருவதால் நீரேந்து பகுதியிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்களிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் கென்யோன் நீர்த்தேக்கத்தில் வான் கதவுகள் இன்று காலை 10 மணிக்கு 6 அங்குலம் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதனால் தாழ்நிலப் பகுதியிலுள்ள அனைத்து மக்களையும் மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்மின் நிலைய அதிகாரியொருவர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேலும் லக்சபான, பொல்பிட்டிய, விமலசுரேந்திர ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் எந்த நேரத்திலும் வான்கதவுகள் திறந்துவிடும் அபாயமும் உள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

# தேசபந்து தேசகீர்த்தி விருது

(கண்டி நிருபர்)



கண்டி மஹய்யாவையைச் சேர்ந்த சக்கரியா எம். றிஸ்வானுக்கு தேசபந்து தேசகீர்த்தி கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது நேற்று முன்தினம் (31) வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சமூக செயற்பாடுகளுக்கான அபிவிருத்தி சங்கம் என்ற மனித உரிமைகள் ஸ்தாபனம் மேற்படி விருதை வழங்கி கௌரவித்துள்ளது.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த வைபவம் ஒன்றின்போது இவ்விருது கையளிக்கப்பட்டது.

## சட்டவிரோதமாக ஏற்றுமதிசெய்ய முயற்சித்த உலோகங்கள் மீட்பு

இந்திய வர்த்தகர் ஒருவர் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்ய முயற்சித்த 6 கோடி ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான பழைய உலோகப் பொருட்கள் அடங்கிய 10 கொள்கலன்கள் இலங்கை சுங்க மத்திய புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும், சுங்கப் பணிப்பாளருமான சுதத் த சில்வா தெரிவித்தார்.

அந்த பத்து கொள்கலன்களிலிருந்து 140 மெற்றிக் தொன் பித்தளைப் பொருட்கள், அலுமினியம் மற்றும் இரும்புப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும், அவற்றில் 140 மெற்றிக் தொன் இயற்கை ரப்பர் உள்ளதாக இலங்கை சுங்கத்திற்கு சமர்ப்பித்த சுங்கப் பிரகடனத்தில் ஏற்றுமதியாளர் தெரிவித்துள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டவிரோத ஏற்றுமதி தொடர்பில் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை இலங்கை சுங்க மத்திய புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வருவதுடன், உலோகப் பொருட்களை அரசுடமையாக்கி சந்தேக நபர்களுக்கு அபராதம் விதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தெதுருஓயா நீர்த்தேக்கத்தின் நான்கு வான்கதவுகள் திறப்பு

(ஜுட் சமந்த)

தெதுருஓயா நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் 02 அடி உயரத்துக்கு திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன காரியாலயம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் (31) இந்த வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

வான்கதவுகள் திறக்கப்படுகின்றமையால் விநாடியொன்றுக்கு 5400 கன அடி நீரானது, தெதுருஓயாவுக்கு திறந்துவிடப்படுவதாக தெதுரு ஓயாவுக்குப் பொறுப்பான நீர்ப்பாசன அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

தெதுருஓயா வான்கதவுகளின் மட்டம் 72 அடி என்பதுடன், இதுவரையில் 70.8 அடி நீர் நீர்தேக்கத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக நீர்ப்பாசன காரியாலயம் அறிவித்துள்ளது.

அதேபோன்று வான்கதவுகள் திறக்கப்பட்டமையினால், தாழ்நிலப் பிரதேசங்களில் நீர் நிரம்பும் நிலை ஏற்படாதென்று தெதுருஓயா நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான நீர்ப்பாசன பொறியிலாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அஸ்வரின் ஐந்தாவது நினைவேந்தல் நிகழ்வு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வரின் ஐந்தாவது நினைவேந்தல் நிகழ்வு நாரேஹன்பிட்டியிலுள்ள அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன காரியாலயத்தில் நேற்று முன்தினம் (31) நடைபெற்றது.

ஏ.எச்.எம்.அஸ்வர் ஞாபகார்த்தக் குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது. பிரதம அதிதியாக இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் சார்பாக தூதுவராலய பொறுப்பதிகாரி ஹிஸாம் அபுதாஹா கலந்துகொண்டார்.

கௌரவ அதிதியாக கொழும்பு மாநகர சபை முன்னாள் மேயர் உமர் காமில் கலந்து கொண்டதுடன், விசேட பேச்சாளராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க கலந்துகொண்டார்.

தலைமையுரையை நவமணி பத்திரிகை ஆசிரியரும் ஏ.எச்.எம்.அஸ்வர் ஞாபகார்த்த குழுவின் தலைவருமான என்.எம்.அமீன் நிகழ்த்தினார். ஏற்பாட்டுக் குழு சிரேஷ்ட உறுப்பினர்




சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார்

இதன்போது அவர் மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வர் பற்றிய ஞாபகார்த்த உரையை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உதவுதொகையும் வழங்கப்பட்டது.

பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தமைக்காக பலஸ்தீன தூதுவராலயப் பொறுப்பதிகாரி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஏ.எச்.எம்.அஸ்வர் குறித்தான நூலும் பிரதம அதிதி உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு வழங்கப்பட்டன.

# மனித உரிமை தினத்தன்று கொழும்பில் மாபெரும் எழுச்சிப் போராட்டம்

## காணாமல்போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் அறிவிப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

எதிர்வரும் மனித உரிமை தினத்தில் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயத்திற்கு முன்பாக மாபெரும் எழுச்சிப் போராட்டமொன்றை முன்னெடுக் கவுள்ளதாக காணாமல்போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தன்று முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில், வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரது உறவினர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக 2006ஆம் ஆண்டுமுதல் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். தேசிய ரீதியில் நாங்கள் இந்தப் போராட்டத்தை மட்டுப்படுத்தாமல் சர்வதேச ரீதியாகக் கொண்டுசென்று சர்வதேசம் முழுவதும் இந்தப் பேராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

எனவே, இந்தப் போராட்டமென்பது வெறுமனே மக்களுடைய இழப்பு மாத்திரமல்ல. இது ஓர் இன அழிப்பு நிகழ்ச்சி நிரலாகவே கடந்த காலத்தில் ஆட்சியாளர்கள் கொண்டுசென்றார்கள்.

குறிப்பாக, மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்போது யுத்தம் என்ற போர்வையில் ஒரு பாரிய இனவழிப்பை ஏற்படுத்தி அதனூடாக நமது உறவுகளைக் கடத்தியும், காணாமலாக்கியும் செய்திருக்கின்றார்கள். இது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும்.

நாங்கள் தொடர்ச்சியாக இது தொடர்பில் சர்வதேச ரீதியான ஒரு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். இறுதி முடிவு கிடைக்கும்வரை இந்தப் போராட்டத்தைக் கைவிடாது முன்னெடுத்துச் செல்லவேண்டுமென நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இது அனைவரும் ஒன்றிணைந்துசெய்யக்கூடிய ஒரு போராட்டம். எனவேதான் நாங்கள் தென்னிலங்கையில் பல போராட்டங்களைச் செய்து பின்னர் வடக்கு, கிழக்கு முழுவதும் போராட்டத்தினை முன்னெடுத்துவந்தோம்.

தொடர்ந்து இந்தப் போராட்டத்தினை மிக எழுச்சியாக எடுத்துச்செல்வதற்காக வருகின்ற மனித உரிமை தினத்தில் கொழும்பில் ஐக்கிய




நாடுகள் சபைக் காரியாலயத்திற்கு முன்பாக வடக்கு, கிழக்கு அனைத்து உறவுகளையும் அழைத்து அங்கு பாரியதொரு போராட்டத்தை மேற்கொள்வதற்குக் காத்திருக்கின்றோம்.

அதேவேளை, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷவைப் பாதுகாக்கும் செயற்பாட்டைச் செய்வதனால் நாங்கள் பல அழுத்தங்களை அவருக்கு வழங்கவிருக்கின்றோம். மூன்று ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

பல இராணுவ அதிகாரிகள் இதில் தொடர்புபட்டிருப்பதாக அவர்கள் முன்மொழிந்திருக்கின்றார்கள். உடனடியாக இந்த அறிக்கைகளை வெளியிட்டு, மக்கள்மயப்படுத்தி, அங்கே சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்ற விடயங்களை உடனடியாக விசாரணையோ அல்லது அதற்குரிய நடவடிக்கை மேற்கொள் ளப்படவேண்டுமென நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கு கோரிக்கையை முன்வைக்கின்றோம். இந்தப் போராட்டம் இத்தோடு நிறைவுபெறாது.

நாங்கள் இந்த நாட்டில் ஜனநாயகத்துடனும் சுதந்திரமாகவும் மக்கள் நடமாடக்கூடிய ஒரு நிலையை உருவாக்கவேண்டும்.

வடக்கு, கிழக்கிலிருந்து முற்றுமுழுதாக இராணுவத்தை வெளியேற்றவேண்டும். காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக, அத்தோடு அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பிலும் கவனஞ்செலுத்தப்பட வேண்டும். இன, மத வாதம் இல்லாமல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து கைகோர்த்துச் செயற்படவேண்டும்.

தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் போராட்ட சக்திகள், வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் கடந்த கால இன்னல்களை உணர்ந்து வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு மக்கள் அனுபவித்த வேதனையை தற்போது தெற்கைச் சார்ந்தவர்களும் அனுபவிக்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கில் எவ்வாறான மிகமோசமான இனவழிப்பை இந்த அரசாங்கம் செய்திருக்கின்றதென்பதை தென்னிலங்கையைச் சார்ந்தவர்கள் தற்போது நன்கு உணர்கின்றார்கள்.

மேலும் கடந்த 2000ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்கவுடன் நாமும் இணைந்து எதிர்க்கட்சி எதிர்ப்பு என்னும் போராட்டத்தினை நாடுதழுவியரீதியில் கொண்டுசென்றோம். அதன்போது பல தாக்குதல்களுக்கும் உள்ளாகியிருந்தோம்.

அப்போது ரணில் விக்கிரமசிங்க இந்த காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவைத் தருவதாகக் கூறினார்.

தற்போது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக இந்தக் காணாமலாக்கப்பட்டவர்களை கண்டுபிடித்தல், அரசியல்கைதிகளை விடுவித்தல், மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகள் மீளக் கையளித்தல் உள்ளிட்ட விடயங்களை மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

# மரணத்திலும் பிரியாத தம்பதி!

## கண்டியில் சோகம்

திருமணப் பந்தத்தில் இணைந்து 60 வருடங்களாக சிறந்த புரிந்துணர்வுடன் இணை பிரியாமல் வாழ்ந்த தம்பதியினர், மரணத்திலும் பிரியாமல் ஒன்றாக உயிரிழந்த சம்பவமொன்று கண்டி, குருதெனிய, தம்பவெல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான ஆர்.ஏ.எஸ்.ரணசிங்க (வயது - 88), அவரது மனைவியான ஏ.ஜி.பண்டாரநாயக்க (வயது - 81) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

ரணசிங்க நேற்று முன்தினம் (30) காலையில் உயிரிழந்துள்ளார். கணவரின் பிரிவால் கவலை



யுற்றிருந்த மனைவியின் உயிரும் ஓரிரு மணிநேரத்துக்குப் பின்னர் பிரிந்துள்ளது.

இந்தத் தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகளும், 11 பேரப்பிள்ளைகளும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழில்துறை விவசாய நடைமுறைகளால் சுற்றுச் சூழலுக்கும் மனித ஆரோக்கியத்துக்கும் பாரிய தீங்கு

## கொள்கை வகுப்பாளர்கள் கவனம் செலுத்தவேண்டுமென ஜிலின் பசுமை விவசாய மன்றத்தில் பாலித கொஹொன கோரிக்கை






தொழில்துறை விவசாய நடைமுறைகளால் சுற்றுச்சூழலுக்கும் மனித ஆரோக்கியத்திற்கும் ஏற்படும் தீங்குகள் குறித்து கொள்கை வகுப்பாளர்கள் குறிப்பாக கவனிக்கவேண்டியதன் அவசியத்தை ஜிலின் பசுமை விவசாய மன்றத்தில் உரையாற்றிய தூதுவர் கலாநிதி பாலித கொஹொன எடுத்துரைத்துள்ளார்.

இருப்பினும், இன்று உலகிலுள்ள எட்டு பில்லியன் மனிதர்களுக்கு உணவளிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

சீனாவில் இடம்பெற்ற ஜிலின் பசுமை விவசாய மன்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின்படி, 836 மில்லியன் மக்கள் ஒவ்வொரு இரவும் பட்டினியாக படுக்கைக்குச் செல்கின்றார்கள். இந்த சவாலுக்கான தீர்வு, உகந்த உற்பத்தித்திறனையும் மனித ஆரோக்கியத்தையும் பராமரிப்பதற்காக விஞ்ஞான ரீதியாக சாத்தியமான குறைந்தபட்ச அளவிற்கு இரசாயன சேர்க்கைகள் மற்றும் புதைபடிவ எரிபொருட்களை நம்புவதாகும். சீனாவின் ஜிலின் மாகாணம் இதை உண்மையாகவே உணர முடியும் என்பதை நிரூபித்துள்ளது. தீவிரமான வறுமையை சீனா ஒழித்துவிட்டது, அதாவது யாரும் பசியுடன் வாடுவதில்லை.

அரசாங்கமும் விவசாயிகளும் குறைந்தபட்ச இரசாயன மாசுபாட்டுடன் பாதுகாக்கும் கறுப்பு மண்ணின் வளத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட நான்கு பிராந்தியங்களில் ஜிலின் மாகாணமும் ஒன்றாகும்.

புவி வெப்பமடைதல் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவற்றில் சந்தேகத்திற்கு இடமில்லாத பங்களிப்பின் காரணமாக மட்டுமல்லாமல், பரிஸ் உடன்படிக்கையின்கீழ் அரசுகளால் மேற்கொள்ளப்படும் சட்டபூர்வமான கடமைகளின் காரணமாகவும் விவசாயத்தில் புதைபடிவ எரிபொருள் வழித்தோன்றல்களின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டியது அவசியமாகும்.

கொவிட்-19 தொற்றுநோய், உக்ரைன் போர் மற்றும் பல நாடுகளைப் பாதிக்கும் நிதி நெருக்கடி ஆகியவற்றின் தாக்கத்தால் இன்று உணவு நெருக்கடி உலகம் முழுவதும் தீவிரமடைந்துள்ளது. எமது கிரகம் மற்றும் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வு இன்று நாம் மேற்கொள்ளும் தெரிவுகளில் தங்கியுள்ளது.

உரம் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவுசெய்வதற்கான அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் அதிகரித்துள்ள உணவுப் பற்றாக்குறை உட்பட தற்போதைய நெருக்கடிகளை சமாளிப்பதற்காக இலங்கைக்கு உதவிகள் தேவைப்படுகின்றன. எவ்வாறாயினும், தனது பிரதான உணவான அரிசியில் கணிசமான அளவு தன்னிறைவு பெற்ற ஒரு நாடாக, உடனடியிலான சிரமங்களை எதிர்கொண்டதுடன், இலங்கை விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.



**பிரபல பாடகர் எச்.ஆர்.ஜோதிபாலாவின் 35 ஆவது வருட நினைவு நிகழ்வு அண்மையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் நடைபெற்றது. இதன்போது அவரால் பாடப்பட்ட பாடல்களை சிறப்பாக பாடிய ஜனக குணரத்னவுக்கு மலர்மாலை அணிவித்து வானொலிப் பெட்டி ஒன்றை நிலையத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க வழங்குவதையும் அருகில் பணிப்பாளர் நாயகம் நளின் குமார நிஸ்ஸங்க, டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் உடனிருப்பதையும் காணலாம்.**

# புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் சேர் டி.பி.ஜயதிலக்கவின் உருவப்படம் திறந்துவைப்பு

நவீன இந்திய - இலங்கை உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் 80ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்தியாவுக்கான இலங்கையின் முதலாவது பிரதிநிதியான சேர் டி.பி.ஜயதிலக்கவின் உருவப்படத்தை இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அண்மையில் புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் திறந்துவைத்தார்.

1942ஆம் ஆண்டு இந்தியாவுக்கான முதல் பிரதிநிதியாக சேர் டி.பி. ஜயதிலக்கவை இலங்கை (அப்போதைய சிலோன்) அனுப்பியதிலிருந்து இந்த ஆண்டு 80ஆவது ஆண்டு நிறைவைக் குறித்து நிற்கின்றது.

இந்த ஆண்டு புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முக்கியமான ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், சான்சரி கட்டடத்தில் சேர் டி.பி.ஜயதிலக்கவின் உருவப்படத்தை திறந்துவைப்பது தொடர் நடவடிக்கைகளில் ஒன்றாகும். முன்னதாக, பெப்ரவரியில், உயர்ஸ்தானிகராலயம் அதன் சான்சரி கட்டிடத்திற்கு சேர் டி.பி.ஜயதிலக்கவின் பெயரை சூட்டியது.

உருவப்படத்தை திறந்துவைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எளிமையான நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.பி.ரத்நாயக்க, ரோஹினி குமாரி விஜேரத்ன மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர். சபாநாயகர் தலைமையிலான இலங்கை நாடாளுமன்றக் குழு சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு இலங்கை திரும்பும் வழியில் டில்லியில் தரித்திருந்தனர்.




இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் உயர்ஸ்தானிகராலய ஊழியர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சேர் தொன் பரோன் ஜயதிலக்க, அரச நபர், பௌத்த கல்வியியலாளர், பரிஸ்டர், அவரது சகாப்தத்தின் முன்னோடி இலக்கியவாதி மற்றும் ஒரு காலத்தில் இலங்கையின் உள்துறை அமைச்சர் ஆகிய பதவிகளை வகித்த அவர், கல்கத்தா மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவராவார். சேர் பரோன் முதன்முதலில் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கான உணவுப் பொருட்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்ததுடன், பின்னர் அவர் புதுடில்லிக்கான இலங்கை அரசாங்கத்தின் முதல் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

1948ஆம் ஆண்டு சுதந்திர இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் முறையான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபிப்பதற்கு முன்னர் சேர் டி.பி.ஜயதிலக்க இந்தியாவுக்கான இலங்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டமையானது, இரு நாடுகளும் காலங்காலமாக அனுபவித்துவரும் மிகவும் சிறப்பான பிணைப்பு மற்றும் நெருங்கிய உறவின் சாட்சியமாகும்.

# மாத்தளை வடக்கு ஸ்ரீ வலம்புரி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா







(இக்பால் அலி)

மாத்தளை வடக்கு ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வலம்புரி விநாயகர் ஆலயத்தின் 13ஆவது வருடாந்த தேர்த்திருவிழா வெகு விமரிசையாக இடம்பெற்றது.

விசேட வசந்த மண்டப பூஜை நடைபெற்று மங்கள வாத்தியங்கள் முழங்க எல்லாம் வல்ல ஸ்ரீ வலம்புரி விநாயகர் தேரில் ஆரோகணித்து, பக்தர்கள் புடைசூழ வெளிவீதி உள்ளூரில் உலா சென்று இரதத்திலிருந்து ஆலயத்திற்கு விநாயகர் எழுந்தளரும் உற்சவம் நடைபெற்றது.

மாத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஆலயத் தலைவர் சுப்ரமணியம் மலரன்பன் தேவா, உப தலைவர் கருப்பையா பெரியசாமி, செயலாளர் கே. ராமையா, பொருளாளர் கணபதி சத்திவேல், ஆலோசகர் முருகன் ரவிச்சந்திரன் பிரபல்யமான எழுத்தாளர்களான மாத்தளை வடிவேலன், மாத்தளை மலரன்பன் உள்ளிட்ட பெரு எண்ணிக்கையிலான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர்.

# உலக செய்திகள்

## பிரித்தானிய புதிய பிரதமர் யார்? பாரம்பரியத்தை மீறும் மகாராணி



பிரித்தானிய புதிய பிரதமரை ராணி 2ஆம் எலிசபெத் ஸ்கொட்லாந்திலிருந்து விரைவில் அறிவிப்பார் என பெக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பதவி விலகியதைத் தொடர்ந்து, கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர், பிரித்தானிய புதிய பிரதமரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்று வருகிறது. ஆரம்பத்தில் 11 பேர் போட்டியிட்ட நிலையில், ஒவ்வொரு கட்டத்திலும் படிப்படியாக குறைந்து தற்போது முன்னாள் வெளியுறவு அமைச்சர் லிஸ் டிரஸ், முன்னாள் நிதி அமைச்சரான ரிஷி சுனக் ஆகியோர் மட்டும் இறுதிப் போட்டியில் உள்ளனர்.

இந்நிலையில், பிரித்தானிய புதிய பிரதமரை தெரிவுசெய்யும் கன்சர்வேடிவ் கட்சியின் இறுதிப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இறுதி சுற்றுப் போட்டியில் வெற்றிபெறும் லிஸ் டிரஸ் அல்லது ரிஷி சுனக் ஆகிய இருவரில் ஒருவரை மகாராணி 2ஆம் எலிசபெத் புதிய பிரதமராக செவ்வாய்க்கிழமை அறிவிப்பார் என்று பெக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

பிரித்தானிய ராணி 2ஆம் எலிசபெத் உடல்நலக் குறைவால் பயணம் செய்யக்கூடாது என்பதால், 96 ஆண்டு பாரம்பரியத்தை மீறி ஸ்கொட்லாந்திலிருந்து புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பார் என்றும் அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## புரட்சியாளர் சே குவேராவின் மகன் மாரடைப்பால் மரணம்



கியூபாவின் புரட்சி நாயகன் சே குவேராவின் மகன் கமிலோ குவேரா தனது 60ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.

கமிலோ குவேரா வெனிசுலாவுக்கு பயணம் மேற்கொண்டபோது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார். இதனை கியூபா அரச தரப்பு அதிகாரிகள் உறுதிசெய்துள்ளனர்..

சே குவேரா - அலீடா மார்ச் தம்பதியருக்கு பிறந்த 4 பிள்ளைகளில் மூன்றாவது மகனே கமிலோ குவேரா. ஹவானாவில் சே குவேரா ஆய்வு மையத்தின் இயக்குநராக அவர் பணியாற்றி வந்துள்ளார்.

சே குவேரா தொடர்பான ஆவணங்கள் மற்றும் முக்கிய பொருட்கள் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதை கமிலோ குவேரா தனது தாயார் அலீடா மார்ச் உடன் இணைந்து கவனித்து வந்துள்ளார். பெரும்பாலும் இவர் பொது வெளியில் நடைபெறும் நிகழ்வுகளில் அதிகம் கலந்துகொள்ளாமல் இருந்துள்ளார். சிலநேரங்களில் அவரது தந்தையை கௌரவிக்கும் நிகழ்வுகளில் மட்டுமே அவர் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஒரு மகள் உள்ளார்.

கியூபா ஜனாதிபதி மிகேல் தியாஸ் - கானெல், கமிலோவின் மரணத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ளார். "ஆழ்ந்த வேதனையுடன் சேவின் மகனும், அவரது கருத்துகளை முன்னெடுத்து சென்றவருமான கமிலோ நம்மை விட்டு பிரிந்துவிட்டார்" என ட்வீட் மூலம் அவர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் வெள்ளத்தால் 30 இலட்சம் குழந்தைகள் பாதிப்பு



- 6.5 இலட்சம் கர்ப்பிணிகள் சிகிச்சை இன்றி தவிப்பு
- 50 இலட்சம் பேருக்கு நோய் அபாயம்

பாகிஸ்தானில் ஏற்பட்ட வரலாறு காணாத கடும் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 30 இலட்சம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்) தெரிவித்துள்ளது.

மேலும், பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 6.5 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறு சிகிச்சை கிடைக்காமல் தவிப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஐ.நாவின் மக்கள்தொகை நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''பாகிஸ்தான் வெள்ளத்தில் சிக்கி 6.5 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறு சிகிச்சைக்காக தவித்து வருகின்றனர்.

இவர்களில் நிறைமாதக் கர்ப்பிணியான 73,000 பேருக்கு அடுத்த மாதம் பிரசவம் நடைபெறவுள்ளது. ஆனால், இவர்களுக்கு பிரசவம் பார்ப்பதற்கு அனுபவமிக்க மருத்துவர்கள், உதவியாளர்கள் போதியளவில் இல்லை'' - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 50 இலட்சம் பேருக்கு நோய் அபாயம்

இதேவேளை, 50 இலட்சம் பேருக்கு டைபொய்ட், வயிற்றுப்போக்கு போன்ற கடுமையான நோய்கள் பரவுவதற்கான அபாயமுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

பாகிஸ்தானில் அண்மையில் வரலாறு காணாத மழை வெள்ளம் ஏற்பட்டது. இதனால் தண்ணீரால் பரவும் நோய்கள், வெள்ளத்தில் மூழ்கி உயிரிழப்பு, போதிய உணவின்றி ஊட்டச்சத்து குறைபாடு என பல்வேறு வழிகளிலும் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு 30 இலட்சம் குழந்தைகளாவது மனிதாபிமான அடிப்படையிலான உதவிகள் தேவைப்படும் சூழலிலுள்ளனர் - என யுனிசெப் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் யுனிசெப் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பாகிஸ்தானில் கடந்த ஜூலையில் தொடங்கிய பருவமழையால் 3 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் 116 மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அதில் 66 மாவட்டங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. யுனிசெப் அரசு மற்றும் அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து குழந்தைகளின் அவசரத் தேவையைப் பூர்த்திசெய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. கடந்த வாரம் பாகிஸ்தான் தேசிய நெருக்கடி நிலையை அறிவித்தது. கூடவே, உலக நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் தங்களுக்கு உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தது. இதன் அடிப்படையில் உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 350 குழந்தைகள் உயிரிழப்பு

பாகிஸ்தான் மழை வெள்ளத்திற்கு இதுவரை 350 குழந்தைகள் உட்பட 1,136 பேர் உயிரிழந்துள்ளனர். 1600இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 2 இலட்சத்து 87 ஆயிரம் வீடுகள் முற்றிலுமாக சேதமடைந்துள்ளன. 6 இலட்சத்து 62 ஆயிரம் வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளன. பாகிஸ்தானின் மிக முக்கியமான ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டோடுவதால் வீடுகள், விவசாய நிலங்கள், வீதிகள், பாலங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் இன்னும்பிற முக்கிய கட்டுமானங்கள் சேதமடைந்துள்ளன.

மழை, வெள்ளம் சூழ்ந்துள்ளதால் மக்கள் வயிற்றுப்போக்கு, சுவாசப் பாதை தொற்று, தோல் அரிப்பு இன்னும் பிற மாசடைந்த நீரால் ஏற்படும் நோய் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள மக்களில் 40 சதவீதம் குழந்தைகளாக உள்ளனர். வெள்ள நிலைவரம் இன்னும் சில நாட்களில் மேலும் மோசமடையும் என்பதால் உலக சுகாதார நிறுவனம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சுகாதார சேவைகள் சென்று சேர்வதை உறுதிசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. தொற்று நோய்ப் பரவலைக் கண்டறிந்து தடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுயஸ் கால்வாயில் சிக்கிய எரிபொருள் டேங்கர் கப்பல்



சுயஸ் கால்வாயில் சிக்கிய எரிபொருள் டேங்கர் கப்பல் 5 மணிநேரத்திற்குப் பின்னர் மீட்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கலிலிருந்து சவூதி அரேபிய செங்கடல் துறைமுகமான யான்புவை நோக்கி புறப்பட்ட சிங்கப்பூரின் அபினிட்டி வி என்ற சரக்குக் கப்பல், தொழில்நுட்பக் கோளாறால் உலகின் முக்கிய நீர் வழித் தடங்களில் ஒன்றான எகிப்தின் சுயஸ் கால்வாயில் சிக்கியது.

252 மீற்றர் நீளமும் 45 மீற்றர் அகலமும் கொண்ட கப்பல், கால்வாயை மறித்துக்கொண்ட நிலையில், ஐந்து இழுவைப் படகுகளைக்கொண்டு அந்த சரக்குக் கப்பலை கரையிலிருந்து நகர்த்தப்பட்டது. இதையடுத்து, ஐந்து மணிநேரத்திற்குப் பின்னர் சரக்குக் கப்பல் சவூதி அரேபியாவை நோக்கி புறப்பட்டது.

திருமண தேடல் விளம்பரங்களை **இலவசமாக** பிரசுரித்துக்கொள்ள அரிய வாய்ப்பு!

"உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? அவ்வாறாயின் அதற்கான வாய்ப்பை நாம் உங்களுக்குத் தருகிறோம்."




தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) 23CM X 10CM அளவுள்ள கடித உறையில் உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

**உங்களுக்கு கிடைக்கும் சகல கடிதங்களையும் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை உங்களுடைய முகவரிக்கு நாம் அனுப்பி வைப்போம்.**

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900, தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

விவாஹா திருமண சேவை
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு.

thamilaneditor@gmail.com

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7